
சிறுகதை மாதஇதழ்

# மஞ்சரி

38

புரட்டாதி 2023



வளர்ந்த, வளரும் படைப்பாளிகளுக்கான களம்


£4.00 / 150Rs/50Rs(india)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பிரசுராலயம்

Luxmi Publication







| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் |
| 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 |












| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் |
| 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 | 300Rs/£4 |












| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | மு.தயாளன் | சு. ஆர்த்திகா | அலெக்ஸ் பரந்தாமன் |
| 300Rs/£4 | 300Rs/£4 | 400Rs/£4 | 400Rs/£4 | 500Rs/£4 | 400Rs/£4 |

India 400 Rs
London £4
Can/Ame $10
Europe 10 Euro

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை luxmi2128@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்.

எனது எல்லாப்புத்தகங்களும், சிறுகதை மஞ்சரிகளும்
**Amazon Kindle** இல் உள்ளன.
**www.amazon.co.uk/ebooks** இல்
**Type M.Thayalan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாகும்

அரசியல் என்பது மக்களை ஆளுந்திறனாகும். இது சமீபகாலங்களில் பூமிப்பந்தில் வெற்றுக் கோசங்களாகவும் தனிமனித திறனாகவும் உருவெடுத்துள்ளதை காணக் கூடியதாகவுள்ளது. இதனால் அரசியல் மக்களைவிட்டு வெகு தூரம் சென்றுவிட்டது. இதனால் அறமும் பொய்த்துவிட்டது.

இலங்கையில் மட்டுமல்ல சகல நாடுகளிலும் இவையே நடக்கின்றன.

தலைவர்கள் தொண்டர்கள் யாவரும் சம அறிவு நிலையிலேயே இருக்கிறார்கள்.

தேர்தலை நோக்கிய அம்பெறிதலாக அரசியல்மாறிவிட்டது.

மதமும் தன்னை இதுவரை மறைத்துக் கொண்டிருந்த போர்வையைத் தூக்கி எறிந்துவிட்டு வெறி கொண்டு மக்களைவிட்டு வெகு தூரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்த அராஜகங்களில் சிக்குப்பட்ட சாதாரண மக்கள் காயப்பட்டு உயிரிழந்து திசை தெரியாது ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இதன் அடுத்தகட்டம் என்ன என்பது யாருக்கும் தெரியாத ரகசியமாகவுள்ளது. ஒரு காலத்தில் மக்கள் தஞ்சமடையக் கூடியதாகவிருந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் நிலை சார்ந்த கட்சிகள் ஒதுங்கிப் போயிருக்கின்றன.

உலகத்தில் தொழிலாள மக்களின் உரிமையை வென்றெடுத்த ரஸ்சிய நாடு இன்று சின்னாபின்னமாகி சிதறுண்டு போய் இருக்கிறது.

அதேபோல மாவோ தலைமையில் திரண்டெழுந்த சீன மக்கள் குறுகிய காலத்திலேயே பழைய நிலைக்கு வந்து துன்பத்தின் கரங்களில் துவண்டு கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதுதான் இன்றைய வினா?

மு.தயாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்...


1 அரசியல் பிழைத்தார்க்கு.....

2 உள்ளடக்கம்

3 எங்கடட ஊர் கள்ளுக் கொட்டில்
உரும்பிராய் எம்.ரி. செல்வராசா

8 தொடரும் வன்முறைகள்
N.F.றாஸ்மிலா

20 வேலாயுதத்தார்
காரைக்கவி கந்தையா பத்மநாதன்

26 இலவம் பஞ்சு
திருமலையாள்

31 பெண்ணியம்
கி.வினோதினி

36 பந்துகள்
கமலினி கதிர்

40 படிப்பும் பாதிப்பும்
அலெக்ஸ் பரந்தாமன்

43 கரும்பலகை
மு.தயாளன்


தவிர்க்க முடியாத காரணங்களால் செ. யோகராசா எழுதும் மஞ்சரி ஒரு பார்வை வெளிவரவில்லை. அடுத்த மஞ்சரியில் வரும்.

**விநியோகம்:**

யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் ,+94 773788795

மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின் +94 774338878

திருகோணமலை: த. சரண்யா, +94765554649

வெண்பா புத்தகசாலை, யாழ்ப்பாணம் + 94 212 225 090

**சிறுகதை மஞ்சரி 40**

தனி ஒருவரின் தொகுப்பாக வரவுள்ளது. மஞ்சரியில் வராத கதைகள். மஞ்சரியில் ஒரு கதையாவது எழுதிய எழுத்தாளர்.

### அன்பான வேண்டுகோள்.

நீங்கள் படைப்புகளை அனுப்பும்போது வங்கிவிபரம் குறிப்பிட்டால்மட்டுமே உதவித் தொகை அனுப்பி வைக்கப்படும


**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர்,

**அட்டை வடிவமைப்பு:**
ரமணன் நற்குணதயாளன்

**ஓவியர்கள்:** G. கைலாசநாதன் . T. சௌந்தர்

**முதன்மை ஆசிரியர்**
மு. தயாளன்

**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்

**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்

**ஆலோசகர்கள்**
Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649


**சந்தா விபரம்:**
**Srilanka:** 1000Rs/Year
Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year **Den/Swiss/Ger:** 80Euro/year Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan, Barclays, Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307
SWIFTBIC BUKBGB22




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரும்பிராய் எம். ரி. செல்வராசா

# எங்கடை ஊர் கள்ளுக் கொட்டில்






இலண்டனில் வதியும் இவர் பல புத்தகங்களுக்குச் சொந்தக்காரர். இவர் மஞ்சரியில் எழுதும் மூன்றாவது கதை.

வழமைபோல வீட்டில் எல்லோரும் இரவு எட்டு மணிக்கே நித்திரைக்குச் சென்று விட்டார்கள். இரண்டு தங்கைகளும் அடுத்த அறையிலே விளக்கை அணைத்து விட்டு மெதுவாகக் கதைப்பது கேட்டது ஆனால் எதுவுமே விளங்கவில்லை

அறைக்கு வெளியே விறாந்தையில் தூங்கிக் கொண்டிருந்த தந்தையாரின் குறட்டை விறாந்தையில் மங்கிய விளக்கொளியில்தூங்கிக்கொண்டிருந்த அம்மாவை ஒன்றுமே செய்யாது பூட்டியிருந்த எனது அறைக்கதவையும் தாண்டி என் காதுகளை வந்து துளைத்துக் கொண்டிருந்தது. இது வழமையாக கேட்கும் ஒருவித சங்கீதமாகையால் எனக்கும் பழகிவிட்டது.

எனக்கோ நித்திரை வரவேயில்லை. யாருக்கும் தெரியாமல் அடிக்கடி தலையை நிமிர்த்தி நிமிர்த்தி விறாந்தையில் வெளிக் கதவிற்கு மேலேயிருந்த மணிக்கூட்டையே யன்னலூடாக பார்த்துக் கொண்டிருந்தேன். என் நண்பன் விக்கி தான் சரியாக பத்தரை மணிக்குத்தான் எல்லாவற்றையும் கொண்டு வந்து எமது வீட்டிற்கு முன்னால் இருக்கும் தென்னை மரத்தடியில் நிற்பதாகக் கூறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தான். அந்நாட்களில் இரவு ஒன்பது மணிக்குள்ளாகவே ஊரே அமைதியாகி விடும். நாங்கள் இருவரும் கடந்த சில நாட்களாக திட்டமிட்டிருந்த வேலையை இரவு பதினொரு மணிக்குத்தான் செய்வதாகவும் திட்டமிட்டிருந்தோம். அதனால் தான் அடிக்கடி அரைகுறை யாகத் தெரிந்த மணிக்கூட்டை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

இளைய தங்கைக்கு இப்போதுதான் பதின்மூன்று வயது தொடங்கி இரண்டு மாதங்கள் ஆகிவிட்டிருந்தன. மூத்த தங்கையைவிட இளைய தங்கை மிகவும் அழகானவள். ஆனால் இப்போதும் சிறுமிதான். வீட்டில் பெண் பிள்ளைகள் அழகாக இருந்தால் அவர்களுடைய சொந்தப் பெயரால் அழைக்காமல் செல்லமாக 'கிளி' என்று அழைப்பார்கள். எமது வீட்டிலும் அப்படித்தான் இளைய தங்கையை 'கிளி' என்று அழைத்தோம்.

அவள் ஒருநாள் பாடசாலையைவிட்டு தனியே அந்த புதிய கள்ளுக்கொட்டில் பக்கமாக இருந்த பாதையூடாக வரும் போது அங்கே கள்ளருந்திக்கொண்டு அரைவெறியில் இருந்த யாரோ ஒருவர் "அம்மா கிளிக்குஞ்சு, இங்கே வந்து அத்தானுக்கு ஒரு முத்தம் கொடுத்து விட்டுப்போம்மா" என்று நாத்தடு மாறியபடி கூற அவரோடு அங்கிருந் தவர்களில் சிலர் ஏதோ இதுவரை கேட் காத நகைச்சுவையைக் கேட்டதுபோல் ஒரேகுரலில் உரக்கச் சிரித்தார்கள். ஏற் கெனவே அப்பாதையால் வருவதுபற்றி அம்மாவினதும், மற்றையவர்களினதும் எச்சரிக்கையால் சிறிது பயந்திருந்த அவள் அதனைக் கேட்டவுடன் திகைத்து விட்டாள். அடுத்தகணம் ஓவென்று உரக்க அழுதுகொண்டு வீட்டிற்கு ஓடி வந்துவிட்டாள்.

அவள் சிறுமி ஆகையால் பயத் தினால் இதயம் வேகமாக அடித்துக் கொண்டேயிருந்தது. உடம்பெல்லாம் படபடத்துவிட்டது. இரண்டு மூன்று நாட்களாக காய்ச்சலில் படுக்கையாகவே படுத்துவிட்டாள். பாடசாலைக்கோ வெளியிலோ எங்குமே செல்லவில்லை. ஆனால் அம்மாவின் கட்டளைப்படி இப்படி அவளுக்கு நடந்ததையோ, அவள் படுக்கையாக இருந்ததையோ நாங்கள் யாருக்குமே தெரியப்படுத்த வில்லை.

அன்றைய அரசாங்கம் நாடெங்கும் புதிதாக கள்ளுக்கொட்டில்கள் அமைக் கலாம் என புதியதொரு சட்டம் கொண்டு வந்தபோதுதான் இந்தக் கள்ளுக் கொட்டிலும் பிரதான பாதைக்கருகே அமைக்கப்பட்டது. அது எமது வீட்டி லிருந்து இருநூறு யார் தூரத்திலே யேதான் அமைந்திருந்தது. நாமும் அயலவர்களும் வேறு பலரும் எமது எதிர்ப்புக்களைத் தெரிவித்தோம். பாட சாலைப் பிள்ளைகள் செல்லும் பாதை என்றும், பல பெண்கள் தனியே செல்லும் பிரதான பாதை என்றும், நூறு யார் தூரத்திற்குள் அந்த ஊர்க்கோவில் அமைந்திருக்கின்றது என்றும், இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் அமைதியான ஓரிடம் இதிலே அமைக்கவேண்டாம் என்றும் பல முறைப்பாடுகளை வைத்திருந்தும் எதுவுமே பயனளிக்கவில்லை. ஆனால் அக்காணிக்குள் பனைமரங்கள் பேதிய ளவு இருந்ததனாலும், கள்ளருந்த வருப வர்கள் புதிய கள்ளுக்கொட்டில் விதிக ளுக்கு அமைவாக நடப்போம் என்று உறுதிமொழி கூறியதாலும், அந்தக் காணிக்காரரின் அனுமதியுடனும் ஒருசில நாட்களுக்குள்ளேயே பனையோலையால் சுவர்களும், கூரையும் கொண்ட ஒரு திடீர்க்கொட்டில் அமைக்கப்பட்டு விட்டது.

இலண்டனிலும் பல முன்னேறிய நாடுகளிலும் மதுபானசாலைகளை (Public House) என்று கௌரவமான பெயராலேயே அழைப்பார்கள். அங்கே தனியாகவோ, நண்பர்களுடனோ, ஏன் குடும்பமாகவும் சென்று பொழுதைக் கழிக்கலாம். சிறுசிறு பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் கூட அங்கே இருக் கும். இவற்றிற்கும் மேலாக அவை எல்லோருக்கும் போகவர வசதியாக முக்கிய சந்திகளிலேதான் அமைக்கப் பட்டிருக்கும். இடையிடையே சிலசில பிரச்சனைகள் வந்தாலும் அவற்றை கௌரவமான முறைகளிலேயே தீர்த்துக் கொள்வார்கள். சில தொலைக்காட்சி நாடகங்கள்கூட இவற்றை முக்கியமாகக் கொண்டே அமைந்திருக்கின்றன. பாதை தெரியாத வழிப்போக்கர்களுக்கு இவற்றைக் குறிப்பிட்டே பலர் வழி சொல்வார்கள். ஆனால் எமது நாட்டில் மிகவும் ஒதுக்குப்புறமாகவே எப்போதும் அமைக்கப்பட்டிருக்கும். அதற்கு இப்ப டியான சம்பவங்கள் காரணங்களாக இருந்திருக்கலாம்.

தங்கை கிளிக்கு இன்னமும் முன்னர் போல தனியே அப்பாதையால் சென்று வருவதற்குரிய தைரியம் வரவில்லை. கடந்தகால கற்பனைகளோடும், தந்தை யாரின் குறட்டைச்சத்தத்தினூடும் அதனைப்பற்றித்தான் மூத்த சகோத ரியுடன் கிளி ஏதாவது கதைக்கின்றாளா என்று கூர்ந்து கவனித்துக் கொண்டே யிருந்தேன்.

திடீரென வீட்டு வாசலடியில் யாரோ வந்து நிற்கும் சப்தம் கேட்டது. மணிக் கூட்டைப் பார்த்தேன் சரியாக பத்தரை மணி காட்டியது. நானும் என்னுடன் வைத்திருந்த தீப்பெட்டியை எடுத்துக் கொண்டு மெதுவாக எழுந்து எதுவித சப்தமும் செய்யாது எனது அறைக் கதவைத் திறந்துகொண்டு அடிமேல் அடியெடுத்து வைத்தபடி விறாந்தையைக் கடந்து வீட்டு முற்றத்திற்கு வந்து விட்டேன். யாராவது நான் வெளியே செல்வதை வீட்டிலிருந்து பார்க்கிறார் களா என்று திரும்பிப் பார்த்தபடி முற்றத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த எனது 'சைக்கிளை' எடுத்து மெதுவாக உருட்டியபடி முற்றத்தைக் கடந்தேன். திடீரென ஓர் உருவம் முற்றத்திலிருந்த பூமரங்களுக்குப் பின்னாலிருந்து தோன்றி என் முன்னே நின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை உற்றுப் பார்த்துவிட்டு 'அம்மா நீங்களா?' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"நீங்கள் இருவரும் எங்கே போகிறீர்கள்?" அம்மா மெதுவாகக் கேட்டார்.

நான் என் அறைக்குள்ளே படுத்திருந்த போதிலும் நித்திரை கொள்ளாது இருந்ததையும், நண்பன் விக்கி வந்து தென்னை மரத்தடியில் நின்றதையும், அவனைக் கண்டதும் நானும் மெதுவாகப் புறப்பட்டதையும் எப்படி அம்மா அறிந்திருந்தார் என்று இன்றுவரை என்னால் ஊகிக்க முடியவில்லை. ஒரு தாய் தனது பிள்ளைகள் எதுவுமே கூறாத போதும் அவர்களின் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் அறிந்திருக்கும் வல்லமை பெற்றவள் என்றுதான் என்னால் உணரமுடிகிறது.

"அம்மா எங்களைத் தடுக்க வேண்டாம். இன்று அந்தக் கள்ளுக் கொட்டிலுக்கு ஒரு முடிவு கட்டப் போகிறோம்" என்றேன்.

அம்மா சிறிது நேரம் யோசித்தார். "சரி, கவனமாக போயிட்டு வாருங்கள்"

என்று ஆசி கூறுவதைப்போல் கூறிவிட்டு வீட்டிற்குள் சென்றுவிட்டார். நாங்கள் திரும்பி வரும்வரை அவர் வாசலிலேயே இருப்பார் என்பது எனக்குத் தெரியும். நான் புறப்பட்டதை குறட்டை விட்டுக்கொண்டிருந்த தந்தையார் கண்டிருந்தால் என் கன்னங்கள் இரண்டும் புளித்திருக்கவும் கூடும். நான் உருவத்தில் பெரியவனாக இருந்த போதிலும் எனக்கு இன்னமும் பதினாறு வயதுகூட நிரம்பவேயில்லை.

இவற்றையெல்லாம் தென்னை மரத்தடியிலிருந்துகொண்டு அவதானித்த விக்கியும் வீட்டு வாசலடிக்கே வந்து விட்டான்.

"அம்மா என்ன சொன்னார்?" என்று மெதுவான குரலில் கேட்டான். நான் எதுவும் பேசவேண்டாம் என்று சைகை காட்டிவிட்டு 'சைக்கிலில்' ஏறினேன். விக்கியும் நாம் முன்னர் திட்டமிட்டபடி ஒரு போத்தல் மண்ணெண்ணையும் கொண்டு வந்திருந்தான். எமது வீட்டிலிருந்து பிரதான பாதைவரை மெதுவாக வந்த நாம் இருவரும் அந்தக் கள்ளுக் கொட்டிலை நோக்கி விரைவாகப் புறப்பட்டோம்.

அவ்விடத்திற்கு வந்தவுடன் இரண்டு தடவைகள் வேறுவேறு பாதையால் வந்து சுற்றியபடி யாராவது அதற்குள் இருக்கிறார்களா என்று நோட்டம் விட்டோம். யாருமேயில்லை என்று அறிந்தவுடன் மூன்றாம் தடவை வரும்போது எமது 'சைக்கில்களின் வெளிச்சத்தைப் போடாது மெதுவாக வந்து பக்கத்தில் நின்றோம். மீண்டும் ஒரு தடவை கவனமாகப் பார்த்துவிட்டு மண்ணெண்ணையை கூரைமேல் ஊற்றி விட்டு நெருப்பை மூட்டினோம். நாம் மூட்டி வைத்த அந்தத்தீ பெரிதாக சுவாலை விட்டு எரிவதற்கு முன்னரே எங்கள் வீடுநோக்கி விரையாமல் வீட்டிற்கு எதிர்ப்பக்கமாகச் சென்று வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையால் எமது வீட்டை அடைந்தோம்.

அந்தக்கொட்டில் சிறிதாகையால் காய்ந்த ஓலைகள் எண்ணெயுடன் சேர்ந்து சில நிடங்களுக்குள்ளேயே எரிந்து சாம்பராகிவிட்டது. அருகே இருந்த வீடுகளில் வசித்த சிலர் திடீரென எழுந்த வெளிச்சத்தைக்கண்டு ஓடிவந்தாலும் எரிந்த நெருப்பை அணைப்பதற்கு முயலவில்லை. பலருக்கு மறுநாள் கள்ளருந்த வந்தபோதுதான் இரவு நடந்த சம்பவம் தெரியவந்தது.

நாங்கள் மறுநாள் பாடசாலைக்குச் சென்றபோது அதனருகே நின்று கொண்டு இரண்டு பெரியவர்கள் பேசியது என் காதுகளிலும் வீழ்ந்தது. "இந்தக் காரியத்தை எந்தப் புண்ணியவான் செய்தானோ தெரியாது. யாரென்று தெரிந்தால் நான் அவனுக்கு ஒரு மாலை போடுவேன். கொஞ்ச நாட்களாக இந்தப் பாதையால் பொம்பிளைப் பிள்ளைகள் போய்வர முடியாமலிருந்தது. இனிமேல் நாங்கள் நிம்மதியாக இருக்கலாம். திரும்பவும் இனிமேல் இதிலே எதுவும் அமைக்க விடக்கூடாது" என்றார்.

எனது தங்கை கிளிக்கு நடந்ததுபோல் வேறு சிலருக்கும் அங்கே கள்ளருந்த வருபவர்களால் துர்வார்த்தைப் பிரயோகங்கள் நடந்திருக்கின்றன. இதனை என் அம்மாவும் அறிந்திருந்தார். இப்படியான வார்த்தைகள் செயல்களாக மாறினால் ஊரே நாறிவிடும் என்று எண்ணி, இவற்றை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்று தான் எண்ணியதாகவும், அதனால்தான் முதல் நாள் இரவு நாங்கள் புறப்பட்டபோது எங்களைத் தடுக்க வேண்டாம் நான் என்று கூறியபோது எம்மைத் தடுக்கவில்லை என்றும் பின்னால் அறிந்தேன்.

மீண்டும் அதிலே அந்தக் கள்ளுக் கொட்டிலை அமைக்கவேண்டுமென ஒருசிலர் கதைத்தபோதும் யாருமே அதற்கு முன்வரவில்லை. அமைதியாக இருந்த இடம் ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே தேவையில்லாத ஒரு பிரச்சனையை வளர்த்து கொண்டு விட்டதாகவே பலர் உணர்ந்தார்கள். நான் அதுவரை யாருடனும் எதிர்த்துப் பேசியதுகூடக் கிடையாது. ஆனால் எனது தங்கைக்கு நடந்த அந்தச் சம்பவம் என்னை அப்படி செய்யத் தூண்டிவிட்டது. சிலருடைய சந்தோசத்திற்காக பலரைத் துன்பப்படுத்தினால் ஓர் அப்பாவிகூட கொடுமைக்காரனாக மாறலாம் என்றே என் மனம் இப்போதும் சொல்லிக்கொண்டு இருக்கிறது.

(யாவும் கற்பனை அல்ல)

| |
|---|
| எழுத்து என்பது தவம் அல்ல. எழுத்து சமூகம்பற்றிய ஒரு மனிதனின் அவதானங்களும் அவைபற்றிய அவனுடைய வாசிப்புகளின் அனுபவங்களும்தான். தவம் என்று சொல்வதால் எழுத்தாளன் சமூகத்திலிருந்து அந்நியப்பட்டுவிடுகிறான் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடரும் வன்முறைகள்



யாழ்
பல்கலைக்கழக
மாணவியான இவர்
மஞ்சரிக்கு எழுதும்
முதற் சிறுகதை.

**N.F**
**றாஸ்மிலா**

காலை சூரியன் தன்னோட இளங்கதிர்களால ஒளி வீசி உலகையே வெளிச்ச மூட்டும் இந்த அழகை ரம்யமாக்கி ரசிக்க வைக்கும் வகையில் அமைந்தி ருக்கும் கிராமமே நம்மளோட வசந்த புரம். அக்கிராமத்தின் மையப் பகுதியிலே பெரிய மலைத் தொடர் மலையில் இருந்து அருவிகள் சொரிவது கண் கொள்ளா காட்சியாக இருக்கும் வசந்தபுரத்தில் வாழும் குடும்பங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம் கருங்கட் பாங்கான அவ்வூரிலே கமம் செய்வதற்கு வாய்ப்பில்லை. அவ் அழகிய சிறிய கிராமத்திலே அன்னலட்சுமி, தாமோ தரன் குடும்பம் வாழ்ந்து வந்தாங்க.. அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். இரண்டு பெண் பிள்ளையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆண் பிள்ளையுமாவர். மூத்த மகன் குமரன், இரண்டாம் மகள், நிலா மூன்றாவது மகள் காவ்யா. நிலாவும் , காவியாவும் படிப்பறிவில் சிறந்து விளங் குபவர்கள். காவியா அம்மா அப்பாவின் செல்லப்பிள்ளை. அழகிலும் குணத்திலும் மற்றவர்களை மிஞ்சி விடுவாள். குடும்பத் தின் வாழ்க்கை ஒரு சீரான பாதையில் சென்று கொண்டிருந்த வேளையில் விதி சதி செய்து விட்டது. தனது குடும்பத் தாரை பார்க்கச் சென்ற அன்னலட் சுமியும் தாமோதரனும் ஒரு வாகன விபத்தில் சிக்கி உயிரிழந்து விட்டனர். அதன் பின்னர் செய்வதறியாது தவித்த மூன்று பிள்ளைகளும் தங்களது சொந்த கிராமத்தில் இருந்து வெளியேறி, வேலை தேடி நகர்ப்புறம் நோக்கி இடம் பெயர்ந்தனர். அனைத்தையும் இழந்து நகரத்திற்கு வந்தவர்கள் வாடகை வீடு ஒன்றில் தங்கி இருக்கின்றனர்.

"காவியா காவியா ஏய் காவ்யா எங்கடி போயிட்ட? காவியா....."

"என்னக்கா என் பேரை மாத்த போறியா ஊரே ஓடி வந்துடும் நீ கத்துறத கேட்டு, லூஸூ போல கத்துற."

"அதில்ல காவியா ஒரு குட் நியூஸ் ஒன்னு அத உன்கிட்ட தான் முதல்ல சொல்லணும்னு ஓடோடி வந்தேன்."

"என்ன அக்கா அப்படி என்ன குட் நியூஸ் மாமன்காரன் ஏதும் பாத்துட் டியோ?"

"அடிங்.. உன்னை என்ன பண்ண?"

"ஒன்னும் பண்ண வேணாம்கா நீ சொல்ல வந்த விஷயத்தை சொல்லு நான் என்ன உன்ன மாதிரியா வெறி பிசி.."

"தெரியும் தெரியும் நீ வெட்டி ஆஃபீஸர்னு பட் நான் சொல்ல போற விஷயத்தை கேட்டால் நீ ரொம்ப சந்தோஷப்படுவ.

"ஓகே ஓகே சொல்லுக்கா , என்ன சொல்லப் போறேன்னு பாப்போம் நீ சொல்றத கேக்குறதுகாக நான் ரொம்ப ஆர்வமா இருக்கேன்".

"காவியா நான் சொல்ல போற விஷ யத்தை முதல்ல sweet ஓட தான் ஆரம்பிக்கனும். So வாய திற காவ்யா . Okay கா. ஆஹ்ஹ்ஹ்.. நான் இன்னிக்கு ரொம்ப ஹேப்பியா இருக்கேன் காவ்யா."

" ஏன்னு சொன்னா நான் இன்னக்கி போன இன்டர்வியூல செலக்ட் ஆயிட் டேன். இனிமே கொஞ்சம் நிம்மதியா இருக்கலாம் டி next Monday ல் இருந்து வேலை ல join பண்ண சொல்லிருக்காங்க. 20,000/= தான் salary கிடைக்குமாம். வீட்டு வாடகைக்கு அஞ்சாயிரம் போய்விடும் அப்புறம் அடுத்தடுத்து செலவு போக மிஞ்சிய பணத்தை சேமிப் புல வச்சுக்கலாம்."

"ஓய் நிலா கண்ணு உனக்கு வேலை கிடைச்சிருச்சா செம்மடி உன் அண்ணன் என்னைய மறந்துடாத என்னையும் பார்த்து கவனிச்சுக்கோ அண்ணனுக்கு உன்னோட salary தந்துடுடி. நான் பாவம்ல. அண்ணனும் கைல காசு பணம் இல்லாமல் சுத்துறவன் நீயாச்சும் ஏதாவது தந்தீன்னா ரொம்ப சந்தோஷப்படுவேன்.

"என்னன்னா உனக்கு எதுக்கு பணம் நீ என்ன கால் கை உடைஞ்சு வாயும் பேச முடியாம ஊமையாவா இருக்கிற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொண்ணுங்க நாங்களே வேலைக்கு போய் சம்பாதிக்கிறோம் எங்ககிட்ட வந்து பணம் கேட்கிற.. நியாயமா பார்த்தா நீ தான் எங்கள உட்கார வைச்சு சம்பாதிச்சு தரணும். மத்த பொண்ணுங் களோட அண்ணனுங்க எல்லாம் இப்படியா இருக்காங்க. நீயும் இருக் கியே. நீ எல்லாம் ஒரு அண்ணனா குடிகார பயலே."

"ஏய் வாயாடி நீ வாய மூடு நீ சின்ன பிள்ளை உனக்கு இதெல்லாம் புரியாது" "நிலாம்மா நீ எனக்கும் பணம் தருவல்ல உனக்கு அண்ணன் மேல பாசம் இருக்கு தானே?"

"சரி அண்ணா salary வந்ததும் அதை பார்க்கலாம் இப்போ நீ போய் குளிச்சிட்டு வா நானும் காவியாவும் சமைக்கிறோம் மூணு பேரும் சேர்ந்து சாப்பிடலாம்".

"இல்ல நிலா நான் அப்புறம் சாப்பிடுறேன் நீயும் அந்த குட்டச்சி காவியாவும் சாப்பிடுங்க".

"சீ போடா குடிகார பயல். அக்கா நீ இவனலாம் கூப்பிடுறது வேஸ்ட். அவன் எல்லாம் நம்மள மாதிரியா நம்ம கூட சாப்பிட வர்ரதுக்கு. எவ்ளோ பெரிய ஆளு அவன். அவன போய் தரையில உட்கார்ந்து நம்மள மாதிரி நடுத்தர தங்கச்சிங்களோட சாப்பிடவானு கூப்பிட்றது அவனுக்கு பிடிக்குமா?"

"சும்மா இருக்கியா காவியா எப்பயும் அண்ணாவ வம்பு இழுத்துட்டு இருக் காம. வா நாம போய் சமைக்கலாம்."

அடுத்த நாள் காலை நிலா டான்ஸ் அகடமிக்கு செல்ல தயாராகிக் கொண்டு வருகிறாள்.

"அக்கா அக்கா எனக்கு டியூஷனுக்கு டைம் ஆச்சு நான் கிளம்புறேன் புள்ளைங்க எல்லாம் வந்து காத்துகிட்டு இருப்பாங்க மிஸ் இன்னும் வரலயேனு. அக்கா நான் எனக்கு சாப்பாடு எடுத்துக்கிட்டேன். நீயும் அண்ணனும் சாப்பிடுங்க நான் போயிட்டு வரேன்."

"சரிங்க டீச்சரம்மா நீ பத்திரமா பார்த்து போயிட்டு வா, போயிட்டு கால் பண்ணு காவியா."

"சரிக்கா bye நான் போயிட்டு வரேன்."

ஹப்பாஹ் ஒரு மாதிரியா வந்தாச்சு sorry கா நான் உன்கிட்ட டியூஷன் வைக்கிறதுனு பொய் சொல்லிட்டு டான்ஸ் பண்ணி உழைக்கிறதுக்கு வாரேன் எல்லாம் நம்ம கஷ்டத்துக்காக தான். எனக்கு மனசு கஷ்டமா இருக்கு எப்பவுமே இந்த விஷயத்தில் உன்கிட்ட பொய் சொல்றத நினைச்சு கடவுளே நீ தான் எனக்கு துணையாய் இருக்கணும்.

ஆட்டோ ப்ளீஸ்.....

"அண்ணா அண்ணா பக்கத்து தெருவுல உள்ள டான்ஸ் அகடமிக்கு போகணும். ஆட்டோ கிடைக்குமா?"

"ஓகே மா போகலாம். என்னம்மா டான்ஸ் அகடமிகெல்லாம் போற ஏதும் டான்ஸ் கத்துக்கிறியா? அங்க உள்ளவங்க எல்லாம் கொஞ்சம் மோசமானவங்கனு கேள்விப்பட்டு இருக்கேன். கொஞ்சம் கவனமா இருந்துக்கோமா உன்னோட நல்லதுக்காகத்தான் சொல்றேன். நீ பாக்க அழகா வேற இருக்கல்ல. இந்த காலத்துல நடக்கிற விஷயங்கள் பத்தி எல்லாருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும் தானே. இந்த காலகட்டம் மிகவும் சீரழிந்து போய் காணப்படுது. அந்த சீரழிவுகள்ள இருந்து ஒவ்வொரு பொண்ணுங்களையும் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்."

"நீங்க சொல்றதும் சரிதான்னா அந்த கடவுள் இருக்கார்ல அவர் எப்பவுமே எல்லோருக்கும் துணையா இருப்பாரு..

"இது தானே மா நீ சொன்ன அகடமி.

500 /= ஆச்சுமா."

"இந்தாங்க அண்ணா தேங்க்ஸ். நான் போயிட்டு வரேன்."

................

வீட்டில் நிலா அண்ணனை தேடி கொண்டிருந்தாள். "அண்ணா அண்ணா எங்க இருக்கீங்க? நைட் நீங்க சாப்பிடலை இப்பையாச்சும் சாப்பிட வாங்க அண்ணா." என்ற நிலா,

' இந்த அண்ணா ஒன்னு எங்க தான் போயிட்டாரோ சரி ரூம்ல போயிட்டு பார்ப்போம். என்ன ரூம்லயும் இல்ல. இந்த அண்ணா வேற வீட்டு சாப்பாடு சாப்பிடவே மாட்டார் எப்ப பாரு எங்கே யாச்சும் போய்ட்றது.'

'மாங்குயிலே பூங்குயிலே சேதி ஒண்ணு கேளு உன்னை மாலையிட தேடி வரும் நாளு இந்த நாளு...'

"ஏய் ரவுடி என்னடா காலங்காத்தால குடிச்சிட்டு ரவுடித்தனம் பண்ணுறியா உன்னை எல்லாம் பெத்தாங்களா இல்ல செஞ்சாங்களானு தெரியல".

"போடா டேய் நீ உன் வேலைய பாரு பேச வந்துட்டான் ஓவரா பேசினா மூஞ்சி முகரைய பேத்திடுவேன் பாத்துக்கோ."

என்ன வெளியே அண்ணன் குரல் கேக்குது என்னன்னு போய் பார்க்கலாம்.

நீ என்னோட மூஞ்சி முகரைய ஒடச்சது போதும் உன்னோட மூஞ்சி முகறைய பாத்துக்கோ முட்டா பய குடிகாரன்.

"டேய் உன்ன விட மாட்டேன் இருடா இன்னைக்கு உன்னை என்ன பண்ணுறேன் பாரு."

"அண்ணா என்ன ஆச்சுன்னா ? அண்ணா என்ன இன்னைக்கும் குடிச்சு இருக்கீங் களா ஏன் தான் இப்படி பண்ணறீங் களோ? காலம் காத்தால குடிச்சுக்கிட்டு. குடிக்காதீங்க குடிக்காதீங்கனு எத்தனை முறை அண்ணா உங்களுக்கு சொல்றது எப்பவுமே உங்களுக்கு புரியவே மாட்டாதா? இப்படி வாரவங்ககிட்டயும் போறவங்க கிட்டயும் திட்டு கேட்டு உங்களுக்கு பழகிடுச்சா? உங்க உடம்ப குடிச்சு குடிச்சு நீங்களே கெடுத்துக்க போறீங்க."

"ஏய் விடு என்னைய நீ என்ன பெரிய பருப்பா நடிக்காம போடி வந்துட்டா பேசுறதுக்கு. உன்னை கொன்றுருவேன் இனிமேல் அண்ணா நொண்ணான்னு வந்தீன்னா."

"யேன்தான் இந்த அண்ணா இப்படி பண்ணுறாங்களோ கடவுளே நீ தான் என்னோட அண்ணாக்கு நல்ல வழியை காட்டணும்."

.......................

காவியா டான்ஸ் அகடமியில் நுழை கிறாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வா காவியா என்ன இவ்ளோ லேட் உனக்காகத்தான் இங்க எல்லாரும் வெயிட் பண்றோம். ஒரு நாள் கூட கொஞ்சம் early யா வரமாட்டியா? உன் கூட கொஞ்ச நேரமாச்சும் time spend பண்ணணும்னு நினைப்பேன்."

"சாரி சார் கொஞ்சம் ட்ராபிக்கா இருந்துச்சு அதான் லேட் ஆகிடுச்சு."

"இட்ஸ் ஓகே காவியா நீ இன்னைக்கு ரொம்ப அழகா இருக்க. மேக்கப் போடாமலே நீ ரொம்ப க்யூட் தான் காவியா. காவியா இப்போ நம்ம பக்கத்துல யாருமே இல்ல. So நான் உன்கிட்ட ஒன்னு சொல்லணும். நீ , நான் சொல்ல போறத ஏத்துக் கொள்ள ணும் ப்ளீஸ் காவியா?"

" அதுக்கென்ன சார் சொல்லுங்க."

"காவியா எனக்கு உன்ன ரொம்ப புடிச்சிருக்கு . உன்ன பாக்குறப்போ எல்லாம் உன்ன என்னமோ பண்ணம்னு தோணுது. உன்ன அப்படியே இறுக்கி பிடிச்சுக்கணும்னு தோணுது. என் கூட வாரியா காவியா. நாம ரெண்டு பேரும் சேர்ந்து எங்கேயாச்சும் போயிடலாம்."

"வாட் என்ன சார் உளர்ரீங்க? என்னாச்சு சார் உங்களுக்கு தப்பு தப்பா எல்லாம் பேசுறீங்க?"

"உளரல்ல காவியா உன்ன ரொம்ப புடிச்சிருக்கு."

"ஐயோ சார் ஜோக் பண்ணாதீங்க உங்க வயசு என்ன? என்னோட வயசு என்ன? நான் இங்க டான்ஸ் பண்ண தான் வந்தேன். உங்க கூட வேற வேலை பார்க்க வரல சோ கீப் இட் யுவர் மைன்ட் சார்."

"sorry காவியா". இப்படி அவன் சொல்லும்போது மனதுக்குள் 'இருடி நெக்ஸ்ட் வீக் இருக்கிற நைட் ஃபங்ஷன்ல உன்னை எப்படி எல்லாம் வேட்டையாட போறேன்னு பாரு என்னையே உன்கிட்ட சோறி கேட்க வச்சுட்டல உன்ன விட மாட்டேன் டி'

"Really sorry, shoot இற்கு நேரம் ஆச்சு போலாமா?"

"இட்ஸ் ஓகே சார் போலாம்" என்றாள் காவியா. தன் மனதிற்குள் 'நாம வந்த நாள்ர இருந்தே என் மேல படியுற இவ னோட பார்வை ரொம்ப கேவலமாவே இருக்கு. இவன் கிட்ட எல்லாம் வேல பாக்க வேண்டிய தலை எழுத்து நமக்கு. என்ன பண்ண?'

"Let's start our shoot....!!"

..........................

நிலா வீட்டில் ...."நிலா சமைச்சுட்டியா பசி வைத்த கிள்ளுது நிலா ஏய் நிலா என்னை யோசிக்கிற நீ? நான் பசிக்கு துன்னு சொல்லுறேன் காதில்விழல்லையா உனக்கு? இல்லன்னா இவன் கூட நான் எதுக்கு பேசுறன்னு பேசாம இருக்கியா?"

"ஆங்... சாரிணா கை கழுவிட்டு வா நான் சாப்பாடு எடுத்து வைக்கிறேன்."

"நான் கழுவிட்டேன் நீ பரிமாறு"

"அண்ணா இன்னிக்கு உனக்கும் காவியாக்கும் ரொம்ப பிடிச்ச கத்தரிக் காய் பொரியலும், இறால் வறுவலும் சமைச்சிருக்கேன் நான். நல்லா சாப்பிடு."

"அண்ணா போதுமாண்ணா?"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போதும் போதும் என்ன கருமமோ இது உப்பு, உரப்பு ஒன்னுமே இல்ல. இத மனுசன் சாப்பிடுவானா? என்ன பண்ண பசி உயிர் எடுக்குதே. சாப்பிடு வோம்.

"அக்கா, நிலா அக்கா நான் வந்துட்டேன்."

வாடா என் தங்கம் என்ன இவ்வளவு லேட்? என்ன மூஞ்சி எல்லாம் பளிச்சுன்னு ஜொலிக்குது ரொம்ப ஹேப்பியா இருக்க போல."

"Sorry கா இன்னிக்கி லேட் ஆகிடுச்சு. அக்கா இன்னைக்கு salary கிடைச்சது பாத்தியா 25,000/= .முதல்ல, வாங்கின கடன் எல்லாம் அடைச்சிட்டு மத்த மத்த விஷயங்கள் எல்லாம் பார்க்க வேண்டும்." "அக்கா அதோட உனக்கு ஆட்டோக்கும் பஸ்ஸுக்கு பணம் எடுத்துக்கோ".

"இங்க பாருடி இப்பதானே நீ வந்த பதறாத முதல்ல பிரஷ் ஆகிட்டு வா சாப்பிட்டு அப்புறம் டிஸ்கஸ் பண்ணலாம் இத பத்தி."

"ஏய் வாயாடி உன் பணத்தில் எனக்கும் 2000/= வேணும் மரியாதையா கொடுத்துடு."

"ஏய் குரங்கு நீ என்ன பெரிய இவனா நீ கேட்ட உடனே பணம் கொடுக்குறதுக்கு நீ ஏதாவது நல்ல விஷயத்துக்கு பணம் கேட்டால் உடனே கொடுத்துடலாம் நீ வெட்டியா ஊர் சுத்துறதுக்கும், குடிக்கிறதுக்கும் தானே கேக்குற உனக் கெல்லாம் பணம் கிடையாது சீ போ."

"ஏய் வெள்ள பூன வாய ஒடச்சிடுவேன் பாரு நீயும் உன் பணமும் திமிர் பிடிச்ச வ போடி."

"போடா கருங்குரங்கு. மூஞ்சயும் மொகரையும் பாரு வந்துட்டான் பேச."

"காவியா நான் உனக்கு என்ன சொன் னேன் போய் பிரஷ்ஷாஹிட்டு வா quick ஆ. நாம ரெண்டு பேரும் சேர்ந்து சாப்பிடலாம்.

........................

இரவு நேரம் காவியாவின் வீட்டில் நிலாவும் காவியாவும் அண்ணனை பற்றி உரையாடுகிறார்கள்.

"அண்ணா எங்க காவியா? வீட்ல இல்லையே."

"அவன் போறான்கா அவனுக்கு பார்லையே ஒரு வேலை போட்டு இருந் தாங்கன்னா அவன் குடிச்சு குடிச்சு அங்கேயே இருக்கலாம். அவன் எப்போ வீட்டுல இருந்திருக்கான். எப்பவுமே ஊர் சுத்தி திரியுறான் இல்லன்னா பார் பக்கம் போயிடுறான்."

"அப்படி சொல்லாத காவியா எனக்கு அண்ணன நினைச்சா கவலையா இருக்கு இப்படியே குடிச்சிட்டு இருந்தா அவ ரோட உடம்பு என்ன ஆகும். அவர் எப்போ தான் இந்த குடிப்பழக்கத்தை நிறுத்துவாரோ தெரியல நான் எப்பவுமே கடவுள் கிட்ட கேட்கிறது அண்ணனை நல்ல வழி படுத்தனும் என்று தான். அம்மா அப்பா இருந்தபோ அண்ணன் எவ்ளோ நல்லா இருந்தாரு இப்ப எந்த நேரமுமே குடிக்க தொடங்கிட்டாரு. ஏன் தான் இப்படி ஆயிட்டார்னு தெரியல."

"ஆமாக்கா கடவுள் ஹெல்ப் பண்ணு வாரு எப்போதுமே கை விடமாட்டார் இப்போ நாம தூங்கலாம் அக்கா."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

காவியாவின் போன் ஒலிக்கிறது.

காவியா உன் போன் அடிக்குது பாரு இந்த நேரத்துல யாரு போன் பண்றது தூங்குற நேரத்துல டிஸ்டர்ப் பண்ணிக்கிட்டு "எடுத்து பேசு காவியா."

"சரிக்கா அது வேற யாரும் இல்ல என் னோட போஸ்... ஓ சாரி சாரி என்னோட கிளாசுக்கு வர பூமிக்கா கால் பண்ணுறா இரு நான் பேசிட்டு வரேன்."

சரி காவியா பேசிட்டு வந்து தூங்கு.

"ஹலோ சொல்லுங்க சார் என்ன இந்த நேரத்துல கால் பண்ணி இருக்கீங்க."
"சார், சார் என்ன சைலண்டா இருக்கீங்க?"

"ஹலோ காவ்யா முக்கியமான விஷயம் ஒன்னு சொல்லணும் அதான் கால் பண்ணேன். மன்டே நைட் அட்வெர்டைஸ்மெண்ட் ப்ரோக்ராம் ஒன்னும் இருக்கு நீதான் அதுல நடிக்கணும் இதுல உனக்கு தரப்போற செலரி இரண்டு லட்சம் உனக்கு ஓகே தானே".

"என்ன சார் என்னை கேட்காம நீங்களே முடிவு பண்ணிட்டீங்க நைட் ப்ரோக்ராம் வார்ரது கஷ்டம் சார் சோ வேற ஆள் பாருங்க சார் என்னால முடியாது."

"இல்ல காவியா நீ நடிக்கிறது தான் எனக்கு ரொம்ப பிடிக்கும் சோ நீ தான் வரணும் அப்படி முடியாதுன்னா இத்தோட உன் வேலையை விட்டுடு."

"இல்ல சார் அப்படியெல்லாம் வேலையே விட முடியாது ஏன்னா இந்த வேலை என் குடும்பத்துக்கு ரொம்ப முக்கியம் சார். வர்ரதுக்கு முயற்சி பண்ணுறேன். இப்ப நான் போன வைக்கிறேன் சார்."

"பேசிட்டியா காவ்யா? ஏன் காவியா இந்த நேரத்துல போன் பண்ணி இருக்காங்க?"

"ஆமாக்கா வார திங்கட்கிழமை நைட் கிளாஸ் வைக்க சொல்றாங்க அக்கா ஏதோ எக்ஸாம் இருக்குதாம். அதான்கா என்ன பண்ணலாம்னு யோசிக்கிறேன்."

"வேண்டாம் காவியா நீ முடியாது கஷ்டம்னு சொல்லு நைட்ல எங்கயும் போகக்கூடாது".

"சரிக்கா பார்க்கலாம் யோசிப்போம் பிறகு. இப்ப தூங்குவோம்."

திங்கள் காலை காவியா அக்காவிற்காக சமைத்து அக்காவை சாப்பிட அழைத்தாள்.

"அக்கா அக்கா டிபன் ரெடி. நீ ரெடி ஆகிட்டியா? வந்து சாப்பிடு அக்கா, அக்கா ஃபர்ஸ்ட் டே கம்பெனியில join பண்ண போற All the best கா உன் டேலண்ட் அ காட்டி அசத்திடுகா". "உனக்கு lunch உம் ரெடி பண்ணி பேக்ல வச்சிருக்கேன் time கு சாப்பிடு".

"சரி காவியா அம்மா, நீ எனக்கு தங்கச்சி மட்டும் இல்லடி ஒரு அம்மாவும் தான்."

"எமோஷனல் ஆகாதகா சாப்பிடு ஃபர்ஸ்ட் நாள் வேலைக்கு லேட்டா போக கூடாது"

"ஓகே மேடம் நான் கிளம்புறேன் அப்ப. நீ கவனமா இரு அண்ணனும் சாப்பிட வருவான். அவனோட வாய் அடிக்காம சண்டை போடாம இரு."

"சரிக்கா கங்கிராஜூலேசன் டேக் கெயார்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலா ஆஃபீஸ் போனபின்பு காவியா வீட்டிலிருந்து யோசித்துக் கொண்டிருந்தாள்.

'அக்கா போயிட்டாங்க இப்போ நாம என்ன பண்ணலாம் எப்படி போறது ப்ரோக்ராமுக்கு இதுக்கு தான் அண்ணைக்கு அந்த எரும சாணி டைரக்டர் அட்வெர்டைஸ்மெண்ட் கு ஏற்ற மாதிரி பிரிப்பெயார் ஆவ சொல்லுச்சா மனுஷனா அவன் மிருகம் வார போற பொண்ணுங்க கிட்ட எல்லாம் தப்பா பேசுறதும் அவங்கள தப்பா பார்க்கிறதும் தான் இவனுக்கு வேலை பட் இந்த ப்ராஜெக்ட் பண்ணி கொடுத்தா இரண்டு லட்சம் பணம் கிடைச்சா லோன் எல்லாம் அடச்சு அக்காவோட கல்யாணத்துக்கனும் ஏதாவது சேர்த்து வைக்கலாம்."

"ஏய் வெள்ளை பூனை என்ன பலமா யோசிக்கிற? எந்த நாட்ட புடிக்க போற."

"எனக்கு பசிக்குது சாப்பிட என்ன இருக்கு."

"இட்லியும் சட்னியும் இருக்குனா வா எடுத்து வைக்கிறேன் வந்து சாப்பிடு."

"காவியா இன்னைக்கு நான் பக்கத்து ஊருக்கு பிரண்ட்ஸ் கூட ஒரு பங்க்ஷனுக்கு போலாம்னு இருக்கேன் நீ அக்கா வரும் வரையில எங்கேயும் போகாமல் வீட்டிலேயே இரு."

"சரிண்ணா...!"

மனதிற்குள் 'என்ன இன்னைக்கு இவ டல்லுனு இருக்கா. இவ பேஸ் ஏ சரியில்லையே உடம்பு ஏதும் முடியலையோ இறக்கப்பட்டு கேட்க போனா வாயடிப்பா. சோ,அப்றம் என்னன்னு பார்க்கலாம். "காவியா உன்கிட்ட பணம் இருந்தா ஒரு ஆயிரம் ரூபா தாரியா ஃபங்ஷனுக்கு போறதுக்கு கூட என்கிட்ட காசு இல்ல உன் கிட்ட இருந்தா குடு."

"இருண்ணா வரேன் இந்தா அண்ணா ,இதுல 2000 இருக்கு வெச்சிக்கோ பட் குடிக்காத ப்ளீஸ் உன்கிட்ட கெஞ்சி கேட்டுக்குறேன்."

"சரி சரி உன் போன் அடிக்குது யாருன்னு பாரு போய்ட்டு."

"ஐயோ அந்த எரும சாணி டைரக்டர் தான் போன் பண்ணுறானோ தெரியலையே யாருன்னு பாப்போம்."

"யாரு அக்காவா ?"

அக்காவே தான் "ஹலோ அக்கா போயிட் டியா? Join பண்ணிட்டியா? வேலை எல்லாம் எப்படி போகுது? சாப்டியா?"

"இரு இரு இவ்வளவு கேள்விகளை ஒரே நேரத்தில் கேட்டா நான் எப்படி பதில் சொல்லுவேன்? போயிட்டேன். ஜாயின் பண்ணிட்டேன். அண்ணா சாப்பிட்டானா? நீ சாப்பிட்டியா? இங்க இருக்குற ஸ்டாப் எல்லாம் செம்மபா"

சூப்பர்கா yes சாப்பிட்டோம். அக்கா நைட் டைம்ல கிளாஸ் வைக்க சொல்லி தொல்லை பண்ணுறாங்க அக்கா என்னக்கா பண்ணுற டுமோரோ எக்ஸாம் வேறு இருக்குதாம். என்ன பண்ணட்டும் கா. நான்ஓகே வரேன்னு சொல்லிட்டேன். சோ, நீ வீட்டுக்கு வர மொத நான் போய்டுவேன். நீங்க வந்ததும் கால் பண்ணுங்க நான் வைக்கிறேன். Bye."

ஹப்பாஹ் அக்கா கிட்ட சொல்லியாச்சு இனி போயிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன இவ நான் வேணாம்னு சொல்லிடுவேன்னு கட் பண்ணிட்டா எங்களோட ஏழ்மையால தானே என்னோட தங்கச்சி இவ்ளோ கஷ்டப்படுறா கடவுளே நீ தான் அவளுக்கு துணையாக இருக்க வேண்டும்.

நைட் ல கிளாஸ் வைக்க போறேன்னு காவ்யா நிலா கிட்ட சொல்லிக்கிட்டு இருந்தாளே நான் இன்னைக்கு பங்க்ஷனுக்கு போகக்கூடாது வீட்டிலேயே இருக்கணும் காவியா வர லேட்டாயினா போய் கூட்டிகிட்டு வரணும்.

"ஓகே நான் ரெடி இனி அந்த எருமை சாணி டைரக்டருக்கு கால் பண்ணி லொகேஷன் கேட்கலாம். கால் பண்ணுவோம் என்று சொன்னது மட்டும் தான் அவனே கால் பண்றான்.

"ஹலோ காவ்யா வாட்ஸ் அப்ல லொகேஷன் ஷேர் பண்ணி இருக்கேன் சார்ப் 5 'o clock வந்துடு."

"ஓகே சார் தேங்க்ஸ்."

"கார் அனுப்பட்டுமா வீட்டுக்கு. நீ வரதுக்கு".

"வேணாம் சார் நானே வந்துட்றேன்.

என்னடா இது மனசெல்லாம் பட படன்னு இருக்கு ஏதும் தப்பு நடந்துடாம கடவுளே நீ தான் காப்பாத்தணும் பா.

சொன்ன இடத்திற்கு வந்து சேர்கிறாள்.

'என்னப்பா இவ்ளோ பெரிய ஹோட்டலா! ஷூட்டிங்கு எல்லாம் ரெடி போல எப்பவும் போல இன்னைக்கும் நாம தான் லேட் பண்ணிட்டோம்னு நினைக்கிறேன்.

"காவியா குயிக்கா வா ஸ்டெப்ஸ் எல்லாம் ஆல்ரெடி ப்ராக்டிஸ் பண்ணது தானே ரெடியானஉடனேஸ்ட்ரெயிட்டா பெவிலியன்க்கு போயிடலாம். காவியா நானே உனக்கு மேக்கப் போட்டு விடறேன்"

"வேண்டாம் சார் நானே போட்டுக்கிறேன்."

"ஓகே அப்ப வா நானும் வரேன் உன் கூட ரூமுக்கு போய் ரெண்டு பேரும் சேர்ந்து போட்டுக்கலாம்."

"வேணாம் சார் உங்களுக்கு எதுக்கு வீண்சிரமம்நானே பார்த்துக்கொள்றேன்."

"வா காவியா நானே உன் கைய புடிச்சு கூட்டிக்கிட்டு போனா தான் நீ வருவ." "உள்ள போ காவியா நான் லொக் பண்ணிட்டு வர்றேன்."

"எதுக்கு சேர் லொக் போடுறீங்க வேண் டாம் சார் இருக்கட்டும்."

"இல்லகாவியாலாக்பண்ணுறதுதான் பாதுகாப்பு நான் லாக் பண்ணிட்டேன் நீ உக்காரு மேக்கப் போட சொல்லி தரேன்".

காவியாவின் போன் ஒலிக்கிறது. நிலா வீட்டிலிருந்து அழைக்கிறாள்.

"ஹலோ சொல்லுக்கா வந்துட்டியா நான் டியூஷனுக்கு வந்துட்டேன் இப்போ ஆறு மணி நான் வரதுக்கு 9 ஆகும்."

"ஆமாம் காவியா என்ன ஒரே சவுண்டா இருக்குது டியூஷன் ல தானே இருக்கிற"

"ஆமாங்கா பக்கத்து பில்டிங் ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிற ஹோட்டல்ல சோங் போட்டு இருக் காங்க அதான் சத்தமா கேக்குது".

"சரி காவியா டேக் கேர். எனக்கு மனசுக்கு ஏதோ தப்பு நடக்கிற மாதிரியே பீல் ஆகுது."

"அப்படி ஒன்னும் இல்லக்கா நீ பீல் பண்ணாத நான் வைக்கிறேன்.

அவளும் மனதிற்குள் 'எனக்கும் வீட்டில இருந்து வரப்போ இது மாதிரி தானே தோணிச்சு கடவுளே எதுவும் நடந்திடக்கூடாது நீ தான் என்னைய காப்பாத்தனும்.'

"காவியா நீ ரொம்ப அழகா இருக்க உன் அக்கா உன்ன விட அழகா இருப்பா போலயே."

"ம்ம்ம்"

'பொறுக்கி பொண்ணுங்க யாரை யுமே விட்டு வைக்க மாட்டான் போலயே'

"ஓகே காவியா மேக்கப் போட்டுக் கலாம் காவியா மூணு வகையான மேக்கப் போடணும். நீ போட்டுக்கொள்ள மாட்ட சோ நானே போடுறேன் முதல்ல கண்ணுக்கு ஸ்மோக்கி ஐஸ் போடலாம். அப்புறம் ஃபேஸ் கிளிட்டரி லுக், அப்றம் உதட்டுக்கு ரோஸ் லுக் போடலாம். Okay done இப்போ இந்த காஸ்டியூம் போடு காவ்யா.

"சார் மேக்கப் போட்டாச்சு ல இப்போ வெளியே போங்க நான் காஸ்டியூம் போடணும்."

"முடியாதுடி baby நீ போட்றத நான் பாக்கனும். இன்னைக்கு உன்ன விட மாட்டேன் இன்னைக்கு நீ ரொம்ப அழகா இருக்க ஒன்ன டேஸ்ட் பண் ணனும் baby...

(பவர் கட்)

"செம்மையான மூவ்மெண்ட் பேபி இன்னைக்கு நீ சிக்கி கிட்டடி உன்னை நான் விடவே மாட்டேன். காவ்யா ஐ லவ் யூ டி."

"கடவுளே காப்பாத்து இவன் குடிச்சி ருக்கான். பக்கத்துல வராத .வராதடா வந்த உன்ன கொன்றிடுவேன் வராதன்னு சொல்றேன்ல என்னை விட்டுடு. ப்ளீஸ் ப்ளீஸ் என்னை விட்டுடு. ஐயோ கடவுளே இப்ப என்ன பண்றது? அக்காவுக்கு கால் பண்ணலாம்."

அக்கா ஆன்சர் பண்ணு, அக்கா எங்க அக்கா போயிட்ட ஆன்சர் பண்ணுங்க ப்ளீஸ் என்னைக் காப்பாத்துக்கா,

என்ன காவ்யா கால் பண்றா இந்த நேரத்துல டியூஷன் ல தானே இருக்கிறா. ஹலோ காவ்யா

"டேய் என்ன விடுடா ஒன்னும் பண் ணிடாத ப்ளீஸ் என் பக்கத்துல வராத என்ன விட்டுடு ப்ளீஸ். என்னோட shawl விடு".

"காவியா என்னாச்சுமா ?காவியா என்னடி? காவியா பேசு ப்ளீஸ் உனக்கு என்ன ஆச்சு?"

என்னாச்சு நிலா காவியாக்கு என்ன ஆச்சு? குடு போன நான் பேசுறேன். "காவியா காவியா எங்க இருக்க நீ. ஏய் காவியா அழாம சொல்லு எங்க இருக்க நீ ? காவியா பேசு காவியா வாயாடி பொண்ணு தானே நீ ? பேசு காவியா எங்க இருக்க சொல்லு காவியா."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா அண்ணா என்ன காப்பாத்துங்க இந்த பொறுக்கி கிட்ட இருந்து. அக்கா காப்பாத்துங்க. அக்கா வாங்க அக்கா. எனக்கு பயமா இருக்கு. வந்து என்ன காப்பாத்திடுங்க ப்ளீஸ்."

"காவியா உனக்கு நாங்க இருக்கோம் அழாம சொல்லு நீ எங்க இருக்க காவியா"

"பக்கத்து தெருவுல உள்ள பைவ் ஸ்டார் ஹோட்டலுக்கு வாங்கண்ணா ப்ளீஸ் என்ன காப்பாத்திடுங்க."

"ஏய் போன குடுடி. குடுன்னு சொல்றேன்ல குடு. உன்னோட அண்ணன் பெரிய இவனா உன்ன என்கிட்டே இருந்து இன்னைக்கு யாராலயும் காப்பாத்த முடியாது."

"அண்ணா வாங்கனா போலாம் அங்கே 5 ஸ்டார் ஹோட்டலுக்கு காவியா ஏதோ பெரிய பிரச்சனை மாட்டிகிட்டா போல."

"வா நிலா போலாம் காவியாக்கு எதுவும் ஆகாம கடவுள் காப்பாத்தணும்."

"அண்ணா ஆட்டோ வருமா பக்கத்து தெருவுக்கு போகணும் பக்கத்தில் உள்ள பைவ் ஸ்டார் ஹோட்டலுக்கு"

"ஓகே தம்பி போலாம் உங்க ரெண்டாவது தங்கச்சி காவியாவும் அங்க தான் போனா ஏதாவது விசேஷமா தம்பி?"

"இல்லன்னா கொஞ்சம் பாஸ்டா போங்கனா ப்ளீஸ்.."

அண்ணா இன்னும் கொஞ்சம் வேகமா போங்க ப்ளீஸ்

"நிலா அழாத காவ்யாக்கு எதுவும் ஆகாது கடவுள் காப்பாத்துவாரு".

" எக்ஸ்கியூஸ் மீ மேம் இங்க காவியானு யாராவது வந்தாங்களா?"

"வெயிட் சார் ஐ வில் செக். நோ சார் அப்படி யாருமே இங்க வந்தில்ல."

"ப்ளீஸ் மேம் இன்னொரு முறை செக் பண்ணி பாருங்க ப்ளீஸ். ப்ளீஸ் உங்கள கெஞ்சி கேட்கிறேன்."

"ஓகே மேம் பாக்குறேன் . காவ்யா டைரக்டர் செந்தில்னு ரெண்டு பேர் ரூம் புக் பண்ணி இருக்காங்க.

"மேம் ரூம் நம்பர் சொல்லுங்க ப்ளீஸ்."

அப்படி மற்றவங்கட personal details ய வெளிவிடக்கூடாது but நீங்க ஏதோ பெரிய பிரச்சனை இல்ல இருக்கீங்கன்னு தெரியுது நான் சொல்றேன் but யாருக்கும் இது தெரியாம பார்த்துக் கொள்ளுங்க. ரூம் நம்பர் 22 செகண்ட் ஃப்ளோர் லெப்ட் சைட்ல உள்ள லிப்ட்ல போலாம்."

"தேங்க்யூ சோ மச் மேம் உங்கள் உதவிய வாழ்நாள் முழுக்க மறக்க மாட்டேன். வாங்க அண்ணா போலாம்."

"நீங்க அந்த பக்கம் பாருங்க, நான் இந்த பக்கம் பாக்குறேன். அண்ணா இங்க வாங்க அண்ணா ரூம் நம்பர் 22 இதுதான்.

இது தான் அவங்க சொன்ன ரூம்ணா" quick ஆ ஓபன் பண்ணுங்க.

"பக்கத்துல வராத, ஏய் பக்கத்துல வராதடா இந்த கத்தியாலே உன்ன குத்திடுவேன்."

"காவியா என்னாச்சு நாங்க வந்துட்டோம். உனக்கு எதுவுமே ஆகாது அண்ணா அவன விடாதே கொன்னு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுடுண்ணா."

"ஏய் என்னோட தங்கச்சிய என்னடா பண்ண பாத்த உன்ன சும்மாவே விட மாட்டேன். உன்னை கொன்னு போட்டுட்டு தான் விடுவேன் இன்னைக்கு."

"அண்ணா நீ எதுவும் பண்ணாத அவன போலீஸ்ல புடிச்சு கொடுத்து அவனுக்கு மரண தண்டனை கொடுக்கணும்."

"நிலா நீ போலீசுக்கு போன் போடு.

நிலாக்கா என்னைய மன்னிச்சிடுக்கா சோரிக்கா. நீங்க வந்து இல்லன்னா நான் என்னாயிருப்பேன்னே தெரியல. இந்த பொறுக்கி என்னைய என்ன பண்ணி இருப்பான்னு தெரியல."

நிலா போலீஸ்க்கு தகவல் அறிய தந்ததும் போலீஸ் ஹோட்டலுக்கு 5 நிமிடத்தில் வந்துவிட்டார்கள்.

"சார் இவன அரெஸ்ட் பண்ணுங்க இவன் என் தங்கச்சியை நாசம் செய்ய பார்த்தி ருக்கான். சிசிடிவி கேமராவை செக் பண்ணுங்க எல்லாம் புரியும்."

"ஆமாங்க சார் அண்ணா சொல்றதெல்லாம் உண்மைதான் அரெஸ்ட் பண்ணுங்க சார் இந்த பொறுக்கிய. இவன வெளியே விட்டா இவன் இத்தனை பொண்ணுங்களோட வாழ்க்கையே சீராழிப்பாண்ணே தெரியல. இவனுக்கு பெரிய தண்டனையா குடுங்க சார். இவன மன்னிச்சவே கூடாது சார். எத்தனையோ பொண்ணுங்களோட வாழ்க்கையே சீரழிச்சிட்டான்."

"மிஸ்டர் செந்தில் பாதிக்கப்பட்ட பெண்ணின் மூலம் உங்கள நாங்க அரெஸ்ட் பண்றோம். காவ்யா போலீஸ் ஸ்டேஷனுக்கு வர வேணும்."

"ஓகே சார் வீட்டுக்கு அழைச்சிட்டு போயிட்டு நான் கூட்டிகிட்டு வரேன்."

"நிலா காவியா வ அழைச்சிட்டு வா வீட்டுக்கு போய் பேசிக்கலாம்."

வீட்டுக்கு சென்ற பின்னர் நடந்த விடயங்கள் அனைத்தையும் காவியா நிலாவிடம் கூறினாள். அதாவது தான் வேலைக்கு சென்றது தொடக்கம் நடந்த அனைத்து உண்மைகளையும் கூறினாள். பின் காவியாவின் அண்ணன் மனம் உடைந்து போய் தங்கைகள் இருவரிடமும் மன்னிப்பு வேண்டி தனது தப்பை உணர்ந்து தான் இனிமேல் வேலைக்கு செல்வதாகவும் தங்கைகள் இனிமேல் வேலைக்கு செல்ல வேண்டாம் வீட்டிலேயே இருக்கும்படியும் கூறினான். அத்தோடு அன்றிலிருந்து தனது குடிப்பழக்கத்தை நிறுத்திவிட்டு திருந்தி வாழ தொடங்கினான். டைரக்டர் செந்தில் காவியாவின் வாக்குமூலமும், அவனால் பாதிக்கப்பட்ட மற்றைய பெண்களின் வாக்கு மூலமும் நீதிமன்றத்தில் அவனுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது.

---

மனைவி இருந்தபோதே மாக்ஸ் பல வியாதிகளால் துன்பப்பட்டான். இருந்தாலும் சிந்தனை குழம்பாமல் இருந்தான். ஆனால் ஜென்னி இறந்தபோது முற்றிலும் சிநதனை அற்று தனி அறைக்குள் முடங்கிக் கொண்டான்.

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் உவங்கள் பெரும்பான்மை இனத்தோடை இனியும் சேந்திருக்கேலாது..... கொஞ்ச நஞ்சம் இருக்கிற எங்கட இடங்களிலையும் விகாரையளைக் கட்டிக்கொண்டு வாறாங்கள்......"

"எங்கடை பிரதேசத்தைப் பாதுகாத்து எங்கட அடுத்த சந்ததியிட்டைக் குடுக்க வேணும்......"

"அப்பதான் அதுகள் சீரும் சிறப்புமா வாழ ஒரு இடம் இருக்கும்..... "

"எங்கட மொழியை எங்கட பண்பாட்டை எல்லாம் நாங்கள் என்ன விலை குடுத்து எண்டாலும் காப்பாத்த வேணும்...."

"நாங்கள் இந்தியா வரும்... அது வரும்....இது வரும்.... எங்கடை பிரச்சினையத் தீர்த்து ஒரு தீர்வு தரும் எண்டு நம்பிக்கொண்டுஇருக்கேலாது ......."

"எங்கட வழியை நாங்கள் பாக்க வேணும்...ஒண்டுமொண்டா நிண்டு உதுகளை

# வேலாயுதத்தார்



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்



கொழும்பில்வதியும் இவர் இடைவிடாது எழுதிக் கொண்டிருக்கும் சிறந்த சமூக சிந்தனையாளர். நளினமான எழுத்து நடையைக் கொண்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்க வேணும்... போராட வேணும்.." எண்டு ஊரின்ரை ஒதுக்குப்புறமாஇருந்த அந்தக் கிராமச் சங்கத்திலை நடந்த கூட்டம் ஒண்டிலை வேலாயுதத்தார் காரசாரமாப் பேசிக் கொண்டு இருந்தார் ....

முதல்நாள் இரவு கொழும்பிலை இருந்து வந்த பயணக்களைப்பு வேலா யுதத்தாரின்ரை முகத்திலை அப்பட்ட மாத் தெரிஞ்சது. உப்பிடித்தான் அடிக் கடி கொழும்பிலை இருந்து வந்து ஊர் ஊராக் கூட்டம் போட்டுப் பேசுவார்.

"இஞ்சை இண்டைக்கு இருக்கிற சாராயம்...கசிப்பு...., போதைப்பொருள் வியாபாரம்....வாள்வெட்டு.... எண்டு எல்லாம் எங்கடை இனத்தை அழிக்க எண்டு உவங்கள் உந்த அரசாங்கங்கள் திட்டமிட்டுக் கொண்டு வந்த விசயங் கள்...."

"உதுகளுக்கு நாங்கள் ஒரு நாளும் இடம் குடுக்கப்படாது ...." எண்டு தொண்டையை அடிக்கடி செருமிக் கொண்டு கையாலை தடவிக்கொண்டு பேசினவர் முன்னாலை இருந்த போத்தி லிலை இருந்த தண்ணியை மடக் மடக் எண்டு குடிச்சார் .

கொழும்பு யாழ்ப்பாணம் இரவு பஸ் சிலை வடிவா நித்திரை கொள்ள வேணும் எண்டு போட்டு பஸ்சிலை ஏறமுந்தி சாடையாக் கீறிப்போட்டுத்தான் வேலா யுத்தார் ஏறுவார். நேற்றும் அப்படித் தான் கனடாவிலை இருக்கிற அவற்றை மூத்த பெடியன்ஆரோ வந்தவையிட்டை குடுத்துவிட்ட புது பிராண்ட் போத்தி லிலை இருந்துதான் எடுத்து அடிச்சவர். புதுசா இருக்கெண்டு போட்டுக் கொஞ் சம் கூடவா அடிச்சுப்போட்டார் தொண்டை இன்னும் காந்து காந்து எண்டு காந்திக்கொண்டு இருந்துது . இரவைக்கு இந்த இழவைவிட்டுப் போட்டு வேறை ஒரு பிராண்ட்தான் பாவிக்க வேணும் எண்டு நினைச்சுக் கொண்டார் . வழக்கமாப் பயணம் வெளிக்கிடேக்கை உடுப்பு எடுத்து பையிலை வைக்கிறாரோ இல்லையோ போத்தில் ஒண்டு ரெண்டு கவனமா எடுத்து வைச்சுப்போடுவார்.இரவிலை படுக்க முந்தி சாடையாக் கீறினால்த்தான் அவருக்கு நித்திரை வரும் .

அண்டைக்கு கூட்டத்திலை இருந் தவை எல்லாம் பெரும்பாலும் அன்றாடம் காச்சியள் அண்டண்டைக்கு கூலி வேலைக்குப் போனால்த்தான் அவை யின்ரை வீடுகளிலை அடுப்பெரியும் . விகாரை கட்டுறதோ.. கோயில் கட்டு றதோ...திருவிழா நடத்திறதோ ...இல் லாட்டில் அடாத்தாக் காணி பிடிக் கிறதோ... எண்டதை விட அடுத்த வேளைச் சோத்துக்கு என்ன செய்யிறது எண்டதுதான் அவையின்ரை பெரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை . அதுதான் அவையின்ரை மண்டையை ஒவ்வொரு நாளும் குடையிற பிரச்சினை . வயித்தை பசி விறாண்டிச்சோ தெரியேல்லை ரெண்டொருத்தர் தங்கடை வயிறுகளைத் தடவினபடி வேலாயுதத்தாரின்ரை பேச்சைக் கேட்டுக்கொண்டு இருந்திச்சினம்.

அங்கை இருந்த பொம்பிளையள் சிலர் கைம்பெண்கள், புருசனைப் பிள்ளையளைத் துலைச்சுப் போட்டுக் ..காணமல் குடுத்துப்போட்டுக் கண்ணீரும்கம்பலையுமா வாழ வழி தெரியாமல் நிக்கிறவை. மிச்சமாஇருக்கிற பிள்ளையளை என்னண்டு கரை சேர்க்கப்போறம், அதுகளின்ரை எதிர்காலம் எப்படி இருக்குமோ எண்டு எந்த நேரமும் ஏம்பலிச்சுக் கொண்டு இருக்கிறவை . அங்கை கூட்டத்துக்கு வந்திருந்த ஒருத்தர் சக்கர நாற்காலியிலை வந்து இருந்தார். இன்னொருத்தர் ஊன்று கோலோடை வந்திருந்தார் . அவை ரெண்டு பேரும் கடைசி வன்னிச் சண்டையுக்கை ஆப்பிட்டு ஷெல், ரவை மழையிலை குளிச்சு தின்னக் குடிக்க வழி இல்லாமல் பெய்யப் பேல வழி இல்லாமல் யமனோடை ஒண்டா இருந்து சீவிச்ச ஆக்கள் . கஷ்டப்பட்டு கைகால்களைத் தானமாக் குடுத்துப் போட்டு மிச்ச உடம்போட ஒருமாதிரித் தப்பி வந்து முள்ளுக்கம்பி வேலி முகாமுக்கை நிறைய அரியண்டங்களைத் தாங்கிக் கொண்டு முடங்கிக் கிடந்து போட்டுத்தான் ஊரோடை வந்து சேந்தவை .

அவையின்ரை முகத்திலைஇன்னும் அவை அனுபவிச்ச அந்த வலிஇருந்தது. வலி எண்டிறதை விட அநியாயமாத் தோத்துப்போனமே எண்ட வேதனை தான் கூட இருந்தது எண்டுதான் சொல்ல வேணும். இவங்கள்வேலாயுதம் மாதிரி ஆக்கள் இப்பிடிக் கதைச்சுக் கதைச்சே இன்னுமொரு சண்டையைக் கொண்ணந்தால் சனத்தாலை தாங்கேலுமே எண்ட யோசினை அவையிட்டை இருந்தது. சண்டையுக்கை ஆப்பிட்டு அனுபவிச்சவைக்குத் தானே வலி எண்டால் என்ன வேதனை எண்டால் என்ன எண்டு தெரியும். வேலாயுத்தார் மாதிரி சண்டையின்ரை நிறமே என்னண்டு தெரியாமல் சீவிச்ச ஆக்களுக்கு உந்த வலியளும் வேதனையளும் விளங்காது . அவை உந்தச் சனத்தின்ரை கஸ்ர நஷ்டங்களுக்கு ஒரு வழி பாக்கவேணும் எண்டதை விட தங்கடை அரசியலை எப்பிடிக் கொண்டு போகலாம் எண்டு தான் பாப்பினம் .

வேலாயுதத்தாருக்கு உந்தச் சனத்தின்ரை துன்பங்கள் துயரங்கள் பஞ்சம் பசி பட்டினியை எப்பிடியும் தன்ரை அரசிய லுக்கு மூலதனமாக்கிப் போட வேணும் எண்ட விருப்பம் கன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளா இருக்குது. அதைமாதிரி அதை எப்பிடிச் செய்ய வேணும் எண்டு அவருக்கு வடிவாத் தெரிஞ்சு இருக்குது. இஞ்சை சண்டை நடக்கேக்கை ஒரு மாதிரி வெளிநாடுகளுக்கு ஓடிப்போய் தங்கடை பிள்ளை குட்டியளின்ரை சோலி சுறட்டு எல்லாம் முடிச்சுப் போட்டு ஒய்வு எடுத்தபிறகு பொழுது போகாமல்இருக்கிற வேலாயுதத்தாரின்ரை நண்பர்கள் சிலர் அவருக்கு காசு அனுப்பி "மச்சான்நீ ஒண்டுக்கும்கவலைப்படாதை நாங்கள் இருக்கிறம்" எண்டு அவரை உசுப்பேத்துவாங்கள். அவைக்கு என்ன காரணமோ தெரியாது இஞ்ச இருக்கிற சனத்தை ஒரு விதமான கொதி நிலையிலை வைச்சிருக்க வேணும் எண்டு ஒரு மன விருப்பம்இருக்குது.

அதாலைதான் வேலாயுத்தார் உப்பிடி அடிக்கடி வந்து கூட்டம் போட்டு சனத்துக்கு உசுப்பேத்திப் பேசுவார். எண்டாலும் அங்கை இருக்கிற ரெண்டொரு இளந்தாரிப்பெடியள் குறுக்கை மறுக்கை கேள்வி கேட்டு அவரை உண்டு இல்லை எண்டு பண்ணிப்போடுவாங்கள். அண்டைக்கும் அப்பிடித்தான் அவர் பேசிக்கொண்டு இருக்கேக்கை

"அப்ப ஐயா போராட்டம் எண்டு ஒண்டு துடங்கினால் நீங்கள் இனி கொழும்புக்குப் போகாமல் இஞ்சையே இருப்பியளோ..?"

"உங்கடை மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளையள் எல்லாரும் போராட வருவினமோ....?" எண்டு கேக்கவும் அவருக்கு கடும் கோவம் வந்திட்டுது.

"தம்பிமாரே என்ன விசர்க்கதை கதைக்கிறியள் போராட வேணும் எண்டு போட்டுத்தானே நான்இஞ்சை வந்திருக்கிறன்..." எண்டவர் மேலும் வாதப் பிரதி வாதங்களைத் தொடருறது அவ்வளவு நல்லம்இல்லை எண்டு நினைச்சார்.

"தம்பியவை நான்இன்னுமொரு கூட்டத்துக்கு கதைக்கப் போகவேணும் இன்னொரு நாளைக்கு ஆறுதலாப் பேசுவம் தம்பியவை" எண்டு கூட்டத்தை முடிச்சார். கூட்டம் முடிஞ்சு போகேக்கை உந்தப் பெடியளுக்கு தன்ரை சினேகிதன் எஸ்.எஸ். பீ எக்கனாயக்காவிட்டைச் சொல்லி நல்ல பாடம் ஒண்டு படிப்பிக்க வேணும் எண்டு மனசிலை கறுவிக் கொண்டார். ஊரிலை நிண்டாப் பிரகண்டம் எண்டு போட்டு அண்டைக்கே கொழும்புக்குத் திரும்பி வந்திட்டார்.

வேலாயுதத்தார் எழுபதுகளிலேயே கொழும்புக் கம்பசுக்கு படிக்க எண்டு வந்தவர். படிச்சு முடிய அங்கயே ஒரு வேலையும் எடுத்து பேந்து சொந்தத்துக்கை தாய் தேப்பன் பாத்த ஒரு பொம்பிளையைக் கலியாணம் கட்டி கொழும்பிலேயே வீடு வாசல் சொத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகம் எண்டு செட்டில் ஆகிவிட்டவர். கொழும்பிலை படிப்பு வேலை எண்ட படியாலை ஆங்கிலம் சிங்களம் அவருக்குத் தண்ணி பட்ட பாடு. வேலாயுதம் எண்டு சொன்னால் தன்னை தமிழன் எண்டு கண்டு பிடிச்சுப் போடுவாங்கள் எண்டு போட்டு தன்ரை பெயரை வெல்லா எண்டு தான் தன்னோடை வேலை செய்யிறவைக்கு சொல்லி வைச்சவர். அவற்றை ரெண்டு ஆம்பிளைப் பிள்ளையளையும் ரெண்டு பொம்பிளைப் பிள்ளையளையும் கொழும்பிலை உள்ள பெரிய பள்ளிக் கூடங்களிலை நல்லாப் படிக்க வைச்சவர். படிச்சு முடிய ரெண்டு ஆம்பிளைப் பிள்ளையளும் ஒரு பொம்பிளைப் பிள்ளையும் வெளிநாட்டிலை போய் குடும்பமா செட்டில் ஆகிவிட்டுதுகள். ஒரு பொம்பிளைப் பிள்ளை மட்டும் தன்னோடை வேலை பாத்த சிங்களப் பெடியன் ஒண்டை விரும்பிக் கலியாணம் கட்டி கொழும்பிலேயே இருக்குது. வேலாயுதத்தாற்றை வெளிநாட்டிலை இருக்கிற பேரப்பிள்ளையளுக்கும் சரி இலங்கையில இருக்கிற பேரப்பிள்ளையளுக்கும் சரி தமிழ் சுட்டுப்போட்டாலும் வராது.

இஞ்சை சண்டை நடந்த முப்பது வருசமும் வேலாயுதத்தார் ஊர்ப்பக்கம் ஒருக்காலும் எட்டி பாக்கேல்லை கொழும்போடையே இருந்திட்டார். அவற்றை பெடி பெட்டையளுக்கு ஊர் என்ன நிறம் எண்டே தெரியாது.

"என்ரை பெடி பெட்டையை நான் மற்ற ஆக்கள் மாதிரி ஊர்வழியை கொண்டு போய்க்காட்டி வளக்கேல்லைத் தெரியுமே.." எண்டு அதை அவர் பெருமையா வேறை சொல்லுவார்.

ஆரும் அவற்றை சொந்தக்காரர் அந்தச் சண்டை நடந்த நேரம் பிணையைக் கிணையை வைச்சு ஒரு மாதிரி பாசைக் கீசை எடுத்து வைத்தியத் தேவை இல்லாட்டில் பெடி பெட்டையளை வெளிநாட்டுக்கு அனுப்புற வேலை சம்பந்தமா தற்செயலாக் கொழும்புக்கு வந்தால் தன்ரை வீட்டுப்பக்கம் அண்ட விடமாட்டார்..

"இஞ்சை போலிஸ் பதிவு அதுஇது எண்டு சரியான கரைச்சல் பாருங்கோ .... நீங்கள் எங்கயும் லொட்ஜ் வழியை போய் நில்லுங்கோ..."

"அவங்கள் பாஸ் எல்லாம் எடுத்து தருவாங்கள்..இனி பாஸ் போர்ட் எடுக்கிறது அது இது எண்டு மற்ற மற்ற உதவியளும் செய்வாங்கள்...."

"அதுதான் உங்களுக்குப் பாதுகாப்பு...." எண்டு காய் வெட்டிப் போடுவார்.

"உதுகளை இஞ்சை அடுத்தால் போலிசுக்காறரின்ரை கரைச்சலுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தி அதுகளுக்கு நாகரிகம் எண்டால் என்னண்டு தெரியாது...."

"அதோடை தமிழிலை கத்திக் குளறிக் கதைக்குங்கள்... பேந்து எங்கடை பெடி பெட்டையும் உதுகளைப் பழகிப் போடுங்கள்.." எண்டு மனிசி லஸ் ஸிட்டைச் சொல்லுவார். கலியாணம் கட்டின உடனையே தன்ரை மனிசி யின்ரை லச்சுமி எண்ட பெயரை நாக ரீகம் இல்லை எண்டு போட்டு லஸ் எண்டு மாத்திப்போட்டார்.

ரெண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு பென்சன் எடுத்த பிறகு பெருந்தொகையா வந்த ஈபீஎப், ஈடீஎப் காசை எடுத்து தன்ரை சிநேகிதன் சில்வாவின்ரை கொம்பனியிலை முதலிட்டவர் தன்ரை வீடுகளிலை இருந்து வாற வாடகை காசை வைச்சுக்கொண்டு சீவிக்கத் தொடங்கினார். பென்சன் எடுத்த பிறகு பொழுது போகுது இல்லையே என்ன செய்யலாம் எண்டு கவலைப்பட்டவர் வடக்கிலை அரசியல் செய்ய ஆள்தேடின ஒரு கட்சியிலை சேந்து மெல்ல மெல்ல அரசியல் செய்ய வெளிக்கிட்டார்.

யாழ்ப்பாணத்தாலை கொழும்புக்கு வந்த வேலாயுதத்தார் பயண அலுப்புத் தீரப் பகல் முழுக்க நல்லா நித்திரை கொண்டு போட்டுப் பின்னேரம் போல எழும்பிக் குளிச்சுப்போட்டு வாரப்பத் திரிகை ஒண்டுக்கு கட்டுரை ஒண்டை எழுதிக்கொண்டு இருந்தார். அண் டைக்கு இரவு அவற்றை சம்பந்தி வீட் டிலை நடக்க இருக்கிற தான நிகழ்வுக்குப் போறதுக்கு முந்தி கட்டுரையை எழுதி முடிக்க வேணும் எண்ட அவசரம் அவற்றை எழுத்திலை தெரிஞ்சுது.

அவர் அப்பிடி எழுதிக்கொண்டு இருக்கேக்கை வந்த அவரின்ரை பேத்தி "சீயா...தே பொண்ட" எண்டு கொண்டு வந்து தேத்தண்ணிக் கோப்பையை மேசையிலை வைக்க "அனே ..மகே ..ரத்தறங் பெற்றியோ .." எண்டு பேத்தியை தூக்கிக் கொஞ்ச எழுதிக் கொண்டு இருந்த பேப்பர் அவற்றை கையை விட்டு நழுவிப்போய் நிலத்திலை விழுந்து சுத்திக்கொண்டு இருந்த காத்தாடிக் காத்துக்கு பட படத்துக் கொண்டு இருந்தது. காத்திலை படபடத்த தமிழின அடையாள அழிப்பு எண்ட அந்தக் கட்டுரைப் பேப்பர் வெல்லாவைப் பாத்து சிரிக்கிற மாதிரி இருந்துது.

வாசிக்க வாசிக்க எழுத்து பலமான ஆயுதமாக வடிவமெடுக்கும். ஒரு கூரிய ஆயுதத்தைவிட எழுத்து மிகக் கூர்மையான ஆயுதமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவம் பஞ்சு

திருமலையாள்

திருமலையில் வதியும் இளம் எழுத்தாளினி. மஞ்சரியில் இது இவரது மூன்றாவது கதையாகும்.





ஏனோ தெரியவில்லை பெயர் தெரியாத வண்டு ஒன்று குத்தி குடைவது போல அவள் உள்ளம் இனம் புரியாத ஒரு நிலையை உணர்ந்தது.

அவனை சந்திக்கப் போகிறாள் என்ற குதூகலத்தில் மனம் இறக்கை விரித்து அவளுக்கே உரித்தான உலகத்தில் பறந்து திரிந்து கொண்டிருந்தது.

அவள் பெயர் ஆத்வி. எல்லோருடனும் வேற்றுமை பாராட்டாது அன்பாகப் பழகுவாள். முகத்தில் எப்போதும் புன்னகை தவழ்ந்து கொண்டிருக்கும். அவளுக்குப் பிடித்த சிறு சிறு விஷயங்களை ரசித்து செய்வாள். சின்ன விடயங்களுக்கும் உணர்ச்சிவசப் பட்டுவிடுவாள். அவள் நாட்குறிப்பில் நண்பர்களுக்கு எப்போதும் முதலிடம் தான் இருக்கும்.

ஆத்வி வயதில் சிறிய வளாக இருந்தாலும், எடுக்கும் முடிவுகளும், மற்றவர்களுடன் பேசும் விதமும், அவளது எதிர்காலத்தைப் பற்றிய கற்பனைகளும், நண்பர்கள் வட்டாரத்தில் இவளுக்கு கொடுக்கும் முக்கியத்துவமும் முதிர்ச்சியடைந்த ஒருவரைப் போலிருக்கும். சிலவேளைகளில் அவளது அம்மா தேவகிக்கும் அம்மாவாக இருந்து வழிநடத்துவாள். அதனால் தேவகிக்கும் பல நேரங்களில் ஆத்வி இருப்பது ஆறுதலாக இருக்கும்.

தீரனைக் காணப்போகும் ஆவலில் அவளுக்குப் பசிக்கவில்லை. தீரன் ஆத்வியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்ம நண்பன் இவர்கள் இருவருக்கும் பதினொரு வருடப் பழக்கம். ஆத்விக்கும் யுவதீரன் என்ற பெயரைக் கேட்டாலே உச்சி குளிரும்.

இந்த பதினொரு வருடத்தில் அவன் ஆத்வியுடன் பழகியது போல வேறு யாரிடமும் சிரித்து கதைத்து பழகிய தில்லை அவனும் அவன்பாடென்று மிருப்பான். ஆத்வி நலமாக உள்ளாளா என்ற அக்கறை எப்போதும் யுவதீரனுக்கு இருக்கும் ஆத்விக்கு என்ன என்றாலும் யோசிக்காமல் செய்வான், அவன் முகத்தை எப்போதுமே இறுக்கமாக தான் வைத்திருப்பான். அவனோடு வேலை செய்யும் மற்றைய லெக்சரர்ஸ் (Lecturer's) கூட அவனைப் பார்த்தால் கதைப்பதற்குத் தயங்குவார்கள் ஆத்வி யின் கண் அசைவுகளை வைத்தே அவளின் தேவையை பூர்த்தி செய்பவன் யுவதீரன். இப்படியான ஒரு நண்பனைப் பார்க்க ஒரு பெண் ஆர்வமாக இருப்பது சகஜம் தான்.

ஆத்வி அவசர அவசரமாக உணவை அருந்திவிட்டு யுவதீரன் விடுமுறைக்கு ஊர் பக்கம் வந்தால் வழக்கமாக சந்திக் கும் கோவிலுக்கு செல்ல அவளது லட்சுமி என்ற நாமம் சூட்டிய வண் டியை வேகமாக எடுத்தாள்.

கோவிலருகே வந்ததும் தீரன் வந்து விட்டானா என்பதை கண்ணால் ஆராய்ந் தாள். தீரன் வராததை ஊர்ஜிதம் செய்தபின் அவளுக்கு பிடித்த பிள்ளை யாருக்கு முன்பு வேண்டுதலை வைத்தாள். "யப்பா பிள்ளையாரப்பா என்டைக்குமே இல்லாம இண்டைக்கு மனசு சந்தோஷ மா இருக்கு இத இப்பி டியே தக்க வச்சுக் கொள்ள என்ன வழியோ அதக்காட்டு. பொதுவா நான் உன்னட்ட எல்லாருக்கும் நிம்மதிய, சந்தோஷத்த குடு எண்டு தான் வேண்டுவன். இண்டைக்கு கொஞ்சம் சுயநலமா எனக்காக கேக்கபோறன் பதினொரு வருஷமா நானும் தீரனும் நல்ல பிரண்ட்ஸா (Friends) இருக்கி றோம். அவன் கூடவே இருக்கும் போது எனக்கு எந்தவிதமான வித்தியாசமான உணர்வும் வரேல்ல. அவன் பக்கத்தில இல்லாத போது தான் தெரியுது நான் தீரன விரும்புறன் எண்டு பிளீஸ் (Please) பிள்ளையாரப்பா எனக்கு நீங்க தான் உதவி செய்யணும் யுவாட்ட இந்த விஷ யத்த சொன்னா எப்பிடி எடுத்துக் கொள் ளுவான்? என்ட பிரண்ட்சிப்பயோ (friendship) என்னையோ பிழையா எடுத்துக்கொள்ளுவானோ? என்றெல் லாம் பயமா இருக்கு பிள்ளையாரப்பா. இதுக்கெல்லாம் நீ தான் துணையிருக்க வேணும்." என்று வேண்டியவாறே தோப்புக்கரணத்தை போட்டு முடித்து கோவில் பிரஹாரத்தை சுற்றி வந்து கோவிலின் தலவிருட்சத்திற்கு கீழே தீரனுக்காக காத்திருந்தாள்.

உடல் திணிவுச் சுட்டிக்கேற்றாற் போல உயரமும் அதற்கேற்ற நிமிர்ந்த நடையுடன் கண்ணால் சைகை செய்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு ஆத்வி அருகே வந்து அமர்ந்தான் தீரன்.

"பிறகு.....எப்பிடி இருக்கா? ஐந்து மாசத்துக்கு பிறகு பாக்கிறன் என்ன அம்மா சாப்பாடு தாரதில்லையா? இல்லாட்டி பிள்ளையாருக்கு ஏதும் வேண்டுதலா? இப்பிடி தேய்ஞ்சுபோய் இருக்கிறா!" என்று தீரன் அக்கறையுடன் அவளை கேலி செய்வதை ரசித்தவாறே

"அதெல்லாம் இல்லடா இப்ப எல்லாம் பசிக்குதே இல்ல ... அம்மா கூப்பிட்டாலும் கேக்குது இல்ல...ஏதோ மனசுக்குள்ள யோசனை கள் ஓடிட்டே இருக்கு." என்றாள்.



"எனக்கும் அப்பிடித்தான் ஆத்வி ஒருமாதிரி சந்தோஷமாவும் இல்ல, சோகமாவும் இல்ல வேறுமாதிரி ஒரு உணர்வு. வாழ்க்கைக்கான அடுத்த கட்டத்த யோசிக்கும் போது ஒரு பயத்தோட பதற்றத்தோட இப்பிடியெல்லாம் இருக்கு. சில விஷயங்களை நேரில கதைச்சாத்தான் உணர்வுபூர்வமான ஒரு புரிதல் கிடைக்கும்! எனக்கு ஏதாச்சுமென்டா ஐடியா மணி நீ இருக்கியே அதான் உன்னைய பார்த்து கதைச்சா ஒரு தெளிவு கிடைக்கு மென்டு கூப்பிட்டன்." என்றான் அவன்.

இதைக்கேட்ட ஆத்வி என்னைப்போலவே விருப்பத்தை சொல்லத் தயங்குகிறான் போல என நினைத்துக்கொண்டு,

"சொல்லுடா உனக்கென்ன உனக்கு பிடிச்ச நல்ல வேலையில இருக்கிறாய் நல்ல சம்பளம் இதுக்குமேல என்ன வேணும்? உனக்கென்ன கவலை? என்ன இருந்தாலும் சொல்லு நான் சொலியூசன் (Solution) சொல்றன்." என்று ஆத்வி உற்சாகத்துடன் கேட்டாள்.

தீரன் தயக்கமின்றி, " நான் ஒரு பிள்ளைய விரும்பிறன். ஆத்வி,"

'என் நண்பன் தீரனா கதைக்கிறான்? நான் தான் தயங்கி கொண்டிருக்கிறன் இவன் என்ன எடுத்தோம் கவுத்தோம் என்டு போட்டு உடைச்சிட்டான்.' என பூரிப்பில் சொல்வதறியாது அவன் கண்களையே பார்த்துக்கொண்டிருந்தாள். தீரன் அவள் பூரிப்பை நீடிக்க விடாமல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவள நான் படிப்பிக்கிற கொலேஜ் (college) இல் தான் பார்த்தன். பாத்ததும் அவ்வளவு அபிப்ராயம் இல்ல. ஆனால் பழகப் பழக அவளை பிடிச்சு போய் ஒரு தைரியம் வந்து விரும்பிறன் என்டு சொல்லிட்டன்." என்றதுமே ஆத்வியின் கற்பனைக் குதிரைகள் பின்னோக்கி வேகமாக ஓட ஆரம்பித்தன.

பூலோகமே ஸ்தம்பித்தது போல, சந்தோஷத்தை தந்த அதே பெயர் தெரியாத வண்டு குத்தி குடைந்து பயங்கர வலியை ஏற்படுத்துவது போல ஒரு சங்கடமான நிலையை உணர்ந்தாள். தன்னிலையை வெளியில்காட்டாது

"ஏ தீரா.. நீ பெரிய ஆள் தான்! நான் நினைச்சன் உனக்கெல்லாம் காதல் ஹோர்மோன்களே இல்ல... நீ வெறும் ஜடமெண்டு ஆனா பாரன் இந்த தீரனுக்குள்ளேயும் ஒரு ரோமியோ மறைஞ்சு இருந்திருக்கான்!" என்றாள் அவள்.

"சும்மா இரு நீ வேற! நக்கலடிக்காம எனக்கு உதவி செய் இந்த விஷயத்த அடுத்த கட்டத்துக்கு எப்பிடி எடுத்துக் கொண்டு போறதெண்டு தெரியல்ல. நீ சொன்னா என்ட அம்மா கேப்பாங்க. பிளீஸ் ஆத்வி ஏதாச்சும் செய்து எங்கட அம்மாவ சரி சொல்ல வச்சிரு!" என பல கனவுகளோடு இருந்த அவளுக்கு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல இருந்தது அவன் கேட்டது.

இங்கே ஆத்வியின் மனதிலோ, 'பெண்கள் யாரிடமும் பெரிதாக பழகாதவன் சிரிக்க மறந்தவன் இலட்சியங்களில் மட்டும் கவனத்தை செலுத்துபவன் எப்படி காதலில் விழுந்தான்?, அவள் மேல் காதல் வருமளவிற்கு அவள் எப்படி பழக்கமானாள்? அவள் என்னை விட அழகாக இருப்பாள் போல! தீரனின் கவனத்தை ஈர்த்திருக்கிறாளென்றால் நான் தீரனுக்கு ஏதோ ஒரு குறை வைத்து விட்டேன் போல! அவள் கொடுத்த எதை நான் தீரனுக்கு கொடுக்க மறந்தேன்? ஒரு நிமிடமாவது என்னை நினைத்துப் பார்த்திருக்கமாட்டானா? அவனுடைய எல்லாமுமாக நான் இருந்தேன் என பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேனே! எந்தவிதத்தில் நான் தீரனின் எண்ணங்களில் வரவில்லை?' என எங்கேயோ அவளுக்குத் தெரியாமல் அடி ஆழத்திலிருந்து அவளது தாழ்வுமனப்பான்மை எட்டிப் பார்த்து கேள்வி கேட்டது. அவளது கற்பனைகள் இலவம் பஞ்சாகப் பறந்து போனதை நினைத்து தன்னை மறந்து இருக்கையில், யுவா,

"இவள் உன்னத்தான்.... அம்மாட்ட கதைப்பா தானே?" ஆத்வி, "இங்கபாரு யுவா, தைரியமா உன்ட விருப்பத்த அந்த பிள்ளைட்ட சொல்ல தெரிஞ்ச உனக்கு ஏன் அம்மாட்ட சொல்ல ஏலாம இருக்கு?! எங்கட விருப்பத்த சொல்றதுக்கெல்லாம் சுதந்திரம் இருக்கு. அம்மா தானே! ஆரம்பத்தில கொஞ்சம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசிப்பாங்க. ஆனா உன்ட சந்தோஷத்துக்கு எப்பயுமே தடையா இருக்க மாட்டாங்க. உன்ட வாழ்க்கைக்கு நீ தான் தம்பி போராடோணும். வேணுமெண்டால் நான் உனக்கு சப்போர்ட்டா (support) இருக்கிறேன் நீ விஷயத்த சும்மா அம்மாட காதில போடு! நான் மிச்சத கதைக்கிறன். கூட யோசிக்காத உன்ட மூஞ்சிய பாக்கேலாம இருக்கு." என்று நட்பின் கடமையை சரிவரச் செய்தாள்.

யுவதீரனுக்கு ஏதோ புதிதாக உற்சாக பானத்தை திணித்து பருக வைத்தது போல உணர்ந்தான்.

"சரிடி சரி சரி! நீ எப்பயும் எனக்காக நிப்பா என்டு தெரியும் ! நானே போய் அம்மாட்ட பேர்மிஷன் (Permission) வாங்குறேன். நீயும் கூடவே இரு. அது சரி உனக்கென்ன யோசனை நீயும் யாரயாவது விரும்பிறியா? சொல்லு நான் உங்கட அம்மாட்ட வந்து கதைக்கிறன்." என்றவனை பரிதாபமாக மேலும் கீழுமாக ஒரு பார்வை பார்த்து விட்டு,

"சேர் (Sir) நீங்க முதல் உங்கட அம்மாட்ட தைரியமா போய்ற்று கதையுங்க, அதுக்குப்பிறகு ஊரவன் காதல சேர்த்து வைக்கலாம்." என்று அவளுக்கே உரித்தான பாணியில் சொன்னாள். தீரனும் சிரித்துவிட்டு, "சரி சரி வெயிலுக்குள்ள இருந்து காய்ச்சல் வரப்போகுது வா போவம்." என்று கூறிவிட்டு கோபுரத்தை வணங்கிவிட்டு சென்றான்.

"இருந்தாலும் பிள்ளையாரப்பா நீ சரியான மோசம்"

என்று கோபத்துடன் கோபுரத்தை தரிசித்து விட்டு அவன் பின்னே பல விதமான எண்ண அலைகள் பாய நடந்தாள் ஆத்வி. இருவரும் புன் சிரிப்புடன் வெவ்வேறு எண்ணவோட்டங்களுடன் விடைபெற்றனர்.

ஆத்வி, 'கற்பனைகளில் தான் யாரும் நம்மை காயப்படுத்தமாட்டார்கள் நினைப்பவை எல்லாம் நடந்தேறும் பிடித்தவை எல்லாம் கையில் கிடைக்கும் நிதர்சனத்தில் கற்பனைக்கெதிரானவை அனைத்தும் நிகழ்ந்து இப்படி மனதை வேதனைக்குள்ளாக்குகிறது.' என மனதில் போராட்டத்துடன் வீடு வந்து சேர்ந்தாள்.

அவளுக்கு பிடித்தவை ஒன்றும் நிகழாது, அவள் எதிர்பார்த்து காத்திருந்தது கைநழுவி போய்விட்டது என்ற தாழ்வு மனப்பான்மையில் நொந்து விம்மி விம்மி குளியலறையில் அழுது மனதை அந்த நேரத்துக்கு மட்டும் இலேசாக வைத்திருக்க படாதபாடு பட்டுக் கொண்டிருந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியம்

கறுப்பில் வெள்ளைக்கரைப் போட்ட கம்பளியின் கதகதப்பு அன்று அதிகாலைக் குளிருக்கு இதமாக விருந்தாலும், பல்லைக் கடித்துக் கொண்டு கம்பளியை உதறி விட்டு எழுந்தாள் தனம். கண்களைக் கசக்கிக் கொண்டாள். அப்போதும் தூக்கத்தில் கண் இமை கள் செருகின. பார்வையில் தெளிவு இல்லைஎன்றாலும் மீண்டும் கண்களைக் கசக் கிக் கொண்டு கலைந்து கிடந்த கருங்கூந்தலை கோதி முடிந்தாள்.



யாழ் பல்கலையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மலையகத்தைச் சேர்ந்தவர். மஞ்சரியில் முதற் கதையை எழுதுகிறார்

கட்டிலை விட்டுக் கீழே இறங்கியவள், மெதுவாக மண்ணெண்ணெய் விளக்கை பற்றவைத்து விட்டு கோடிப்பக்கம் போய், 'தண்ணீர் டங்கி நிறஞ்சுருச்சா?' எனப் பார்த்து விட்டு பக்கத்தில் இருந்த புளிய மரத்தை அண்ணாந்து பார்த்தாள். வேலியின் ஓரம் வளர்ந்து கூரைக்கு மேலாக கிளை படர்ந்து நின்ற மரத்தில் பச்சையும் சாம்பலுமாய் புளியங் காய்களும் கனிகளும் சடைசடையாய்.

பள்ளிக் கூடம் செல்லும் குறும்புக் காரப் பசங்க, பழம் பறிக்க விட்டு எறியும் கம்புகள், கற்கள் மரத்தில் அங்காங்கே தொக்கி நிற்கின்றன. சில நேரங்களில் காற்று வீசும் போது அவ்வாறு தொக்கி நிற்கும் கம்புகளோ, கற்களோ தகரக் கூரையில் 'டமார்" என்று விழும் இந்தச் சத்தம் சில நேரங்களில் தனத்தின் எரிச்சலுக்குக் காரணமாகிவிடும்.

மரத்தை அண்ணாந்து பார்த்தப்படி நடந்தவள், வாளியில் இருந்த தண்ணீரை எடுத்து, வாயைக் கொப்பளித்து துப்பி விட்டு கால்களில் ஊற்றிக் கொண்டாள்



சில்லென்றது.

கி. வினோதினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணெண்ணை விளக்கு வெளிச்சத்தில் அடுப்பை கூட்டிப் பெருக்கி விட்டு, சுள்ளிகளை வைத்து அடுப்பை மூட்டினாள். தண்ணீர் கொதித்தவு டன் தனக்கும், தன் கணவனுக்கும், மாமியாருக்கும் தேநீர் விளாவி விட்டு பலகைக் கட்டையை இழுத்து போட்டு அடுப்பின் முன் அமர்ந்தவளுக்குத் திடீரென அந்தக் காமுகனின் ஞாபகம் ஆழ்மனதில் புழுவாய் துளைத்தது. குளிரிலும் வியர்த்தது தனத்திற்கு. ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்த தனம் பின்னே ஏதோ ஒரு சத்தம் கேட்டதும் சட்டென்று திரும்பியதும் துருவி வீசிய தேங்காய் சிரட்டையில் ஒட்டியிருந்தத் தேங்காய்த் துண்டை கொறித்துக், கொண்டிருந்தது ஒரு எலி. சிறிய ஒரு சுள்ளியை எறிந்தவுடன் அந்த எலி அங்கிருந்து ஓடி மறைந்தது,

அடுப்பிலிருந்து வெளியேறிய சூடு அந்தக் குளிருக்கு இதமாக இருந்தது. பட்சிகள் ஓசையெழுப்பத் தொடங்கின தலையோடு இழுத்துப் போர்த்திக் கொண்டு நன்றாக தூங்கிக் கொண்டிருந்த முத்துவை தேநீருடன் சென்று அருகில் அமர்ந்து, "என்னங்க, எழும்புங்க. விடிஞ்சது கூடத் தெரியாம இப்புடி இழுத்து போத்திக்கிட்டு தூங்கினா இன்னிக்கி பொழப்பு என்னாகுறது? தோட்டத் துலையும் கிழமைக்கு மூணு நாள்தா வேல கொடுக்குறான். அதையும் பாக் காட்டி அடுத்த மாசம் ஒருவேளைக்கு மட்டுந்தா சாப்பிடனும் எழும்புங்க"

"தனம் நேத்து ராத்திரி தூங்கும் போது என்னைய காலைல எப்புடி எழுப்புறதுனு நெனச்சிகிட்டேத் தூாங்கினியா? அப்பப்பா முடியல" என்று கூறியவாறு கைலையைக் கட்டிக் கொண்டு அமர்ந்து, தேநீர் பருகினான்.

"நா ஒன்னு அரசியல் வாதியில்ல. யோசிச்சி வைச்சுருந்து பேசுறத்துக்கு" என்று கூறிவிட்டு மாமியாரை எழுப்பி தேநீரைக் கொடுத்து விட்டு, மூவருக்குமான காலையுணவையும் பகலுணவையும் சமைத்து விட்டு வேண்டா வெறுப்புடன் வேலைக்குச் செல்லத் தயாரானாள். கோனியை எடுத்து இடையில் கட்டி விட்டு கொழுந்து கூடையை தலையில் மாட்டிக் கொண்டு மட்ட வரிச்சியையும் எடுத்து கொண்டு கால்களில் செருப்பு கூட இல்லாமல் விரைவாக எட்டாம் நம்பர் மலையை நோக்கி விரைந்தாள்.

அங்கே வெற்றிலை வாயும் வெறுங் காலுமாய் நின்ற கொண்டிருந்தார் பெரியய்யா, கை செக்ரோலில் லயித்துக் கிடந்தது. அவரிடம் சென்றவள், 'ஐயா! பத்தம்போது இருவது தனலட்சுமி" என்று தன் பதிவு எண்ணைக் கூறியதும் அவர் முதலில் பார்த்தது மெட்டி போட்ட அவளது கால் விரல்களை, பிறகு பார்த்தது அவளது முகத்தை. லயம் பார்க்க வந்த தோட்டத்து டிஸ் பென்சர் கொழுந்து லொறியில் ஏறி போய்விடும் நோக்கத்துடன் கொழுந்து நிறுக்குமிடத்திற்கு வந்து சற்று நேரம் போனதும் லொறி வராததால் கொழுந்து நிறுத்து விட்டு நின்ற தனத்திடம் முத்துவைப் பற்றி விசாரித்தார்.

அந்தச் சூழலில் கதைக்க யாரும் இல்லாத ஒரே காரணத்தால் மட்டுமே அவர் தனத்துடன் பேசினார். இல்லாவிடின் அவளை ஏறெடுத்தும் பார்த்திருக்க மாட்டார். அவர்களெல்லாம் பரம்பரை பரம்பரையாக பெரிய தொழில் செய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர்கள். எந்நேரமும் காலில் பூட்ஸுடன் காட்சி தருவார்கள்.

தனமோ............

ஆலம்பட்டியைச் சேர்ந்த சின்னையாவின் மனைவி பத்மா, தனம் எனும் தன லெட்சுமியை பெற்றுக் கொடுத்து விட்டு தன் உயிரையும் அவளுக்கு அளித்து விட்டு, கடவுளிடம் தஞ்சமடைந்தாள். தரம் பத்து வரை கல்வி பயின்ற தனம், நோய்வாய்பட்ட தன் தந்தையின் நிலை கருதி தன் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள். சில மாதங்களிலேயே சின்னையாவும் கண்மூடினார். தனத்தின் வாழ்க்கை கேள்விக் குறியானது. ஊரி லுள்ள அனைவரும் தனத்திற்காக அனுதாபப்பட்டனரே தவிர அவளுக்காக உதவ எவரும் முன்வரவில்லை. ஆனால் சின்னையாவின் நண்பன் ராசையா தனத்திற்கு சில மாதங்கள் உறுதுணையாக இருந்தார். பின், தனத்தின் வேண்டு கோளுக்கிணங்க தோட்டத்தில் பெயர் பதிந்து வேலைக்குச் சென்றாள். கிடைக் கும் சம்பளத்தில் தன் செலவு போக மீதி உள்ள பணத்தில் ஒரு பங்கை தன் எதிர் காலத் தேவைக்காகச் சேர்த்து வைத்தி ருந்தாள். வருடங்கள் நான்கு உருண் டோடின.

தனலெட்சுமி அதே ஊரில் வசித்த முத்துக்குமாரை விரும்பினாள். முத்துவும் தனத்தின் அழகிலும் பேச்சிலும் மயங் கியவன் தன்னை திருமணம் செய்து கொண்டு வாழ்க்கை முழுவதும் துணை யாக வருமாறு கேட்டுக் கொண்டான். அந்த தருணத்தில் சிறிது தடுமாறினாலும் சிறிது நேரத்தில் தன்நிலைமையைக் கருத்திற் கொண்டும் முத்துவின் மன உறுதியைக் கண்டும் தனது மனப் பூர்வமான சம்மதத்தைத் தெரிவித்தாள்.

முத்துவும் அவனது தாய்க்கு ஒரே மகனாகையால் சொந்தபந்தங்களின் மத்தியில் தன் மகனின் திருமணம் நடை பெற வேண்டும் எனும் தாயின் எண் ணத்திற்கு, மதிப்பளித்த முத்து தனம் திருமணம், சிறப்புற நடைப்பெற்றது. இருவரது இல்லறம் நல்ல முறையில் நடைபெற்றது.

பொறுக்கி எடுத்த சவுக்குச் சுருகைச் சுற்றி கூடையில் போட்டுக் கொண்டு காய்ந்த தேயிலை மிலாரையும் அடுக்கிக் கட்டித் தலையில் தும்மாடு வைத்துக் கொண்டு நின்ற தனம் ஏதோ சத்தம் கேட்டு பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

பீலிக் கரையில் ஒரே கூட்டம்,

'சரி வீட்டுக்கு போய் கூடைய போட் டுட்டு குடத்தையும் எடுத்துக்கிட்டு பீலிக்கு போய் என்னனு பாப்பம்' என எண்ணியவள், கட்டி வைத்த விறகை எடுத்து தலையில் வைத்துக் கொண்டு குறுக்குப் படியில் இறங்கியவள், குளித்து விட்டு ஈரத் தலையும் இடுப்புக்குக் கீழ் கட்டப்பட்ட ஈர வேட்டியுடனும் வந்து கொண்டிருந்த வாசுவிடம் கதை கொடுத் தாள்.

"ஏம்பா வாசு! என்ன பீலிக்கைரையில ஒரேக்கூட்டமாக கிடக்குது என்ன ஏதும் பிரச்சினையா?" என்றாள் சத்தமாக.

"இல்லீங்க அக்கா நம்ம பீலிக்கு முன்னால இருக்கிற தெய்வானை அக்கா அது வீட்டுல உள்ள அண்டா குண்டானு எல்லாத்து லையும் தண்ணி புடிச்சிக்கிட்டு நின் னாக்கா மத்தப் பொம்புளைங்க பாத்துக் கிட்டு சும்மா நிற்பாங்களா? அதான் கொஞ்சம் சத்தமா கிடந்தது."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்பிடியா எந்தநாளு இந்த தெய்வானையோட இதே ரோதனையாப் போச்சு, வீட்டுக்கு முன்னால பீலி இருக்கதால அவ வீட்டுக்கே சர்க்கார்ல எழுதி வச்சிடாங்கனு நெனப்பு அவளுக்கு”

“நீங்க சொல்றதும் சரிதானக்கா... சரி அக்கா நா பொயிட்டு வாறேன். இஞ்சினீரு காம்புறாவுக்குக் காவலுக்குப் போகச் சொன்னாரு பெரியய்யா” எனக் கூறியவன் விறுவிறுவென ஏறிப்போய் விட்டான். தனமும் வீட்டை நோக்கி விரைந்தாள். விறகுக் கட்டை கொல்லைப்பக்கம் சென்று போட்டவள், சுற்றி வைத்திருந்த சவுக்குச் சருகுகளை எடுத்து திண்ணையில் குவித்து விட்டு வீட்டுத் தண்ணீர் டாங்கி நிறைந்திருந்ததால் பீலிக்குச் செல்லவில்லை. விறுவிறுவென கைகால், முகம் அலம்பி முகத்தைத் துடைத்து விட்டு, சேலைமாற்றிக் கொண்டு தலையை சீவி கோதி முடிந்து விட்டு முருகனை வணங்கி விட்டு அடுப்பங்கரைக்குச் சென்று சவுக்கு சருகுகளையும் மிலாரையும் எடுத்தாள். சவுக்குச் சருகு அடுப்பை பற்ற வைக்க, மிலாறு அடுப்பை எரிக்க.

கேத்தலிலிருந்த தண்ணீர் கொதித்தவுடன் தேநீர் விளாவி மாமியாருக்கும் கொடுத்து விட்டு தானும் பருகினாள். என்னதான் அவள் சாதாரணமாக நடந்து கொள்ள முயன்றாலும் கடந்த ஒருவார காலமாக மலையில் நிகழும் சம்பவங்களை நினைத்து அவளது மனம் படபடத்தது.

‘இந்த விடயத்தை கணவன் முத்துவிடம் சொன்னால் அவர் தன்னை தவறாக எண்ணி விடுவாரோ? என் பெயருக்கு களங்கம் வந்து சேர்ந்து விடுமோ? ஊரார் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்?’ இவ்வாறு பல யோசனைகள் அவள் மனதில் தோன்றி மறைந்தன. முத்து வேலை முடிந்து வீடு வந்ததும் குளித்து விட்டு வந்து இரவு உணவு உண்பதற்காக தரையில் அமர்ந்தான். சுடச்சுட உணவு பரிமாறிய தனத்தின் முகத்தைக் கவனித்த முத்து, “என்ன தனம்? ஒரு மாதிரி இருக்க உடம்புக்கு முடியலையா? நானு உன்ன இந்த கொஞ்சநாளாவேப் பாத்துக்கிட்டு இருக்கேன். நீ நீயாவே இல்ல. எதுவாக இருந்தாலும் என்கிட்ட சொல்லுமா? சொன்னாதானே தெரியும்” என்றான் கரிசனையுடன். “அப்பிடியெல்லாம் ஒண்ணுமில்லைங்க, நேத்துலயிருந்து ஒரே தலைவலி அதான்”

“சரி... சரிம்மா. நீ சாப்பிட்டுட்டு நல்லா தூங்கு தலைவலி எல்லாம் பறந்து போயிடும் சரியா”

“ம்........ சரீங்க.”

தனமும் சாப்பிட மனமில்லாமல் முத்துவுக்காக இரண்டு பிடி சோறு சாப்பிட்டு விட்டு படுக்கை விரித்து கடவுளை நினைத்து கொண்டே முத்துவின் அருகில் படுத்தாள். ஆனால் ஏனோ தூக்கம் வரவில்லை. சிறிது நேரத்தில் அவளை அறியாமலே தூங்கிப் போனாள். விடிந்தது. வேலைக்கு செல்ல மனமில்லாமல் வேலைக்குச் சென்ற தனம் தன் நிறைக்குச் சென்றாள். கங்காணி அங்கு வருவதைக் கண்டதும் அந்தப் பக்கம் திரும்பி கொழுந்து பறித்தாள். ஆனாலும் அவள் அருகில் சென்றான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன்.

"என்ன தனம், நா அன்னைக்கி சொன்னதப்பத்தி யோசிச்சுப்பாத்தியா? எதுக்கும் தயங்காத. நா இருக்கேன்"

"ஐயா நீங்க சொல்றது எதுவும் எனக்குப் புரியல" என தயங்கியப்படி கூறினாள் தனம்.

"புரிஞ்சாலும் புரியாக மாதிரியே அப்பாவியா முகத்த வச்சுக்கிறது. இதுதான் உங்கிட்ட எனக்கு ரொம்பப் புடிச்சது. நானு ஒன்னற மாசமா உன்கிட்ட எம் மனச வெளிக்காட்ட நினைக்கிறேன், ஆனா என்னால அது முடியல. நீயும் அசைஞ்சு கொடுக்க மாட்டேன்ற"

"ஐயா உங்க தகுதிக்கும் தராதரத்துக்கும் நா ஒத்துவருவேனா! அப்புடியே வந்தாலும் அது விளக்கமாத்துக்குப் பட்டுக் குஞ்சம் கட்டின மாதிரி இருக்கும்"

இதைக் கேட்ட கங்காணி தனத்தின் கைகளை கொழுந்துடன் இறுகப்பற்றினான். விடுக்கென்று கையை உதறி விட்டாள் தனம்.

"தனம் உன் அழகுக்கும் அறிவுக்கும் நீ இங்க இருக்க வேண்டிய ஆளே இல்ல. நீதா அந்த கருவாப்பய முத்துவ கட்டிக் கிட்டு இப்புடி தேயில மலையேறி கஷ் டப்படுற. இதப் பாத்து எம்மனசு பதறுது. என்னோட வந்துரு உன்ன ராணி மாதிரி வச்சிப் பார்த்துக்குவேன்"

"ஐயா நீங்க நாளைக்கு லீவு போட்டுட்டு உங்க குவார்டஸ்ல தனியா எனக்காக காத்துருங்க. உங்க உண்மையான பாசம் எனக்கு இப்பதான் புரிஞ்சுது. நா கண்டிப்பா வருவேன். எனக்காக சரியா ஒன்பது மணிக்கு காத்திருங்க உங்களுக்காக மட்டுந்தா இனிமேல் இந்த தனம்".

தனம் புன்சிரிப்புடன் அவனைப் பார்த் தாள். கங்காணி எதையோ சாதித்து விட்டதாக எண்ணி கம்பீரமாக ரோட்டை நோக்கி நடந்தான். தனம் அந்தக் காமுகனை ஏளனச்சிரிப்புடன் பார்த்தாள்.

பொழுது புலர்ந்தது. உடம்புக்குச் சரியில்லை எனக் கூறி விட்டு. வேலைக்குச் செல்லாது வீட்டி லிருந்த தனம் காலை ஒன்பது மணிக்கு குளிக்க போவதாக கூறி கங்காணியின் குவார்ட்டஸ்ஸை நோக்கி விரைந்தாள். தனம் வருவதைக் கண்ட கங்காணி வாசலருகில் வந்து அவளை படுக்கைய றைக்கு அழைத்துச் சென்றான்.

'வா. தனம் உன்ன நா எவ்வளவு விரும் புறேனு தெரியுமா? உனக்காக என் உயிரையும் தருவே. வந்து என் பக்கத்துல உக்காரு"

"ஏங்க அவ்ளோ பெரிய வார்த்தையெல்லா சொல்றிங்க. உங்களதா நா புரிஞ்சுக் கிட்டேனே. இனி நீங்கதா எனக்கு எல்லாமே" தனத்தின் கைகளை பற்றி கட்டிலில் சாய்க்க முனைந்த அவனை உதறிவிட்டு நின்றாள் தனம். "ஐயா உங்களுக்காக அரச்சனை பண்ணி பிரசாதம் கொண்டு வந்திருக்கேன் சத்த நேரம் பொறுங்க" எனக் கூறிக்கொண்டே முந்தானையில் முடிந்து வைத்திருந்த மிளகாய்த்தூள் பொட்டலத்தை அவிழ்த்து அவனது முகத்தில் விட்டெறிந்தாள்.

அவன் கதறினான்

**39 ஆம் பக்கம் பார்க்க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



* கமலினி கதிர்



சுவிசில் வதியும் இவர் ஒரு பன்முகக் கலைஞர். மஞ்சரியில் தொடர்ச்சியாக எழுதி வருகிறார்

# பந்துகள்

சுசாந்தனுக்கு நித்திரையே வரவில்லை. தாயகத்திலிருந்து பாதுகாப்பு தேடி அகதியாக சுவிசுக்கு வந்து ஆறு வருடங்கள் முடிந்து விட்டன. மிக மிக நீளமான நாட்களைக் கடத்தி விட்டான். மனைவி பிள்ளைகளை விட்டுப் பிரிந்து நாட்களைப் போக்குவது எவ்வளவு கொடுமையென்பது அதை அனுபவிக்கும்போதுதான் புரிந்தது. பொய்கள் பல சொல்லி அகதியாகப் பதிந்தவர்கள் பலருக்கு கிடைத்த வதிவிட அனுமதி உண்மை மட்டுமே சொன்ன சுசாந்தன் மாதிரி ஆட்களுக்கு மறுக்கப்பட்டதுதான் மிகப் பெரிய கொடுமை. வதிவிட அனுமதி இல்லாமல் வேலையும் எடுக்க முடியவில்லை. சுவிசுக்கு வருவதற்காக வாங்கிய பெருந் தொகைப்பணம் வட்டியுடன் பெருகி கழுத்தை இறுக்கியது. கடன் கொடுத்தவர்கள் மனைவியை என்னவெல்லாம் கேட்டு அவமானப் படுத்துகிறார்களோ என்பதை நினைத்து படுக்கையில் நித்திரை இன்றி தவிப்பதே வழக்கமான ஒன்றானது.

மனிதப்புதைகுழிகள் நிறைந்த மயானத்திலிருந்து தப்பாமலே போயிருக்கலாமென்று எத்தனையோ தடவைகள் நினைத்து நினைத்து வேதனைப்பட்டிருப்பான். வதைமுகாமில் வதைபட்ட போது உயிர் போயிடாதா என்று வருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியபோதும் இங்கு வந்தபிறகு உயிர் வாழ ஆசை இல்லையில்லை பேராசையே பட்டான். வளங்கொழித்த இந்த நாட்டில் தனக்கும் தன் மனைவி,குழந்தைகளுக்கும் ஓரிடம் கிடைக்காதா என்ற நப்பாசை சுசாந்தனிடம் நிறையவே ஒட்டிக் கொண்டிருந்தது. இனத்துரோகிகளும் மண்பற்று இல்லாதவர்களும் சுயநலம் இல்லாமல் தம் இனத்துக்காக போராடியவர்களைக் காட்டிக் கொடுத்தவர்களும் இங்கு சுதந்திரமாக வாழ்ந்துகொண்டிருக்கும் போது உண்மையாக போராடியவர் களெல்லாம் குற்றம் புரிந்தவர்கள்போல் வதிவிட அனுமதி மறுக்கப்பட்டு, என்று திருப்பி அனுப்பப்படுவோமோ என்று நாட்களை எண்ணிக் கொண்டிருப்பது அவமானமாக இருக்கும்.

மற்றவர்களுடன் ஒப்பிட்டு நம் மகிழ்ச்சியை தொலைத்து விடுவது சரியல்ல என்று தான் வாசித்தது நினைவுக்கு வந்து அப்படி நினைக்க விடாமல் செய்ய முயற்சிப்பான். சந்தேகம் மட்டுமல்ல ஒப்பிடுதலும் ஒரு உயிர்கொல்லிதான். ஒருவனின் மனதில் கீழ்த்தரமான நினைவை உண்டாக்கி மனதை விகார மடையச்செய்து விடும் என்று நம்பினான். இனப்பற்றும். மண்பற்றும் இல்லாதிருந்தால் எப்போதோ நாட்டைவிட்டு வெளியேறி ஏதோ ஒரு நாட்டில் தன் குடும்பத்துடன் வாழ்க்கையை வளமாக்கியிருந்திருப்பான். கழுத்தில் நஞ்சுக்குப்பியைக் கட்டிக்கொண்டு தமக்கு ஒரு தேசம் கிடைத்துவிடுமென்று போராடிக் கடைசியில் குப்பியையும் கடிக்க முடியாமல் இப்படி அவலப்பட்டுக் கொண்டு இருப்பதை எண்ணி வேதனை தான் மிஞ்சியது.

தேவாலயத்தில் வேலைகள் இருக்கும் போது அழைப்பார்கள். சிறிய ஊதியம் கிடைக்கும். பதியாமல் தமிழர்களிடம் வேலை செய்தால் வெகு குறைந்த ஊதியம் கொடுப்பதும் முடிந்தளவுக்கு நிறைய வேலைகள் கொடுத்து வதைப்பதும் வழக்கமான ஒன்றாகவே இருந்தது. எல்லோருமே அகதித்தஞ்சம் கேட்டு வந்தவர்களே என்றாலும் சுசாந்தன் போன்றவர்களை இளக்காரமாகப் பார்ப்பவர்கள் பலர் இருந்தார்கள். பின்பு வந்தவர்களைவிட முன்பு வந்ததினால் தாங்கள் உயர்ந்தவர்களாக எண்ணினார்கள். உதவி செய்யும் மனப்பான்மையின்றி எங்காவது வேலைசெய்வதை உள்ளூர் அலுவலகத்திற்கு போட்டுக்கொடுப்பவர்களாகவும் சிலர் இருந்தார்கள். அதுமட்டுமின்றி சிலர் சில பிறந்தநாள் அல்லது விருந்து கொண்டாட்டங்களில் சிற்றுண்டிகள் செய்து பணம் சம்பாதிக்க முயன்றால் உடனிருப்பவர்களே போட்டுக்கொடுத்து விடுவார்கள். தானும் வாழாமல் மற்றவனையும் வாழவிடாமல் செய்யும் ஈனபுத்தியுடன் செயல்பட்டார்கள். வேற்று மொழி பேசும் தேவாலயத்தைச் சேர்ந்தவர்கள் மனிதாபிமானத்துடன் உதவிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும்போது தமிழர்கள் எப்போது மாறப்போகிறார்களென்று சுசாந்தன் அங்கலாய்ப்பான்.

வந்த இந்த ஆறு வருடத்தில் சரளமாக இல்லாவிட்டாலும் டொய்ச்மொழியைப் பேசப் பழகிவிட்டான். அவனுக்கு இவர்கள் பழகும் விதமும் மனிதாபிமானமும் மனதைத் தொட்டது. இங்குள்ள பழக்க வழக்கங்களைப் பார்க்கும்போது தமிழர்கள் இவர்களைப் பார்த்தும் ஏன் மாறாமலிருக்கிறார்கள் என்று வியந்திருக்கிறான். வைத்தியரிடம் சென்றால் அவர் நோயாளியிடம் வந்து கை குலுக்கி அழைத்துச் சென்று அன்பாகப் பேசுவது முதலில் வியப்பாக இருந்தது. தெரியாததைச் சொல்லிக்கொடுக்கும் பண்பு ஒரு இடம் தெரியாமல் வழி கேட்டால் அவசரமாகச் சென்றாலும் நின்று சொல்லிவிட்டுப் போகும் பண்பு அவற்றைத் தானும் கைக்கொள்ளப் பழகினான். எல்லோருமே ஒருவரையொருவர் வாழ்த்தும் மேலான பண்பைப் தன் பிள்ளைகளிடம் விதைத்து விட வேண்டுமென்று ஆவலுடனிருந்தான். எத்தனை விதமான மனக்கோட்டைகள் எல்லாமே சுக்கு நூறாக இடிந்துதான் போயிருந்தான்.

வெளியில் பனி கொட்டிக் கொண்டிருந்தது. பனியென்றால் தாயகத்தில் கொட்டும் நுரைபோன்ற பனியல்ல இது. வெள்ளைச் சீனியைக் கவிழ்த்துக் கொட்டியதுபோல் எங்கும் வெள்ளைக் கடலாய் பார்க்கப் பார்க்க பரவசமாயிருக்கும். விமானத்தில் பறந்து வரும்போது மேகம் பஞ்சுப்பொதிபோல் இருந்ததுபோலவே இந்தப் பனித்துகள்களும் ஒன்றாய் திரண்டு காட்சியளிப்பதை தன் பிள்ளைகளுக்கு காட்டி அவர்களுடன் பகிர மனம் பரபரக்கும். சிறுவர்கள் எல்லாம் பனித்துகள்களை அள்ளி ஒருவர்மேல் ஒருவர் எறிந்து விளையாடுவதைப் பார்க்கும்போது தன் பிள்ளைகளுடன் அதை அனுபவிக்க ஒரு தந்தையாய் மனம் ஏங்கும். அதிகரிக்கும் குளிரின் அகோரப்பசிக்கு தம் குழந்தைகளான இலைகளை உணவாகக் கொடுத்துவிட்டு இலங்கைத் தாய்மார் போல் மொட்டையாக நிற்கும் மரங்களைப் பார்த்து விம்மும் மனம் பூம்பனி மரங்களில் பூக்கள்போல் பூத்திருப்பதைப் பார்க்கும்பொது கொஞ்சம் ஆறுதல்படும். பிள்ளைகளை நினைத்து ஏங்கும் நேரங்களில் மண்ணையும் காக்காமல் குடும்பத்தையும் காக்காமல் இது என்ன வாழ்க்கையென மனம் விரக்தியில் அல்லாடும்.

ஆதித்தனையும் சந்திரனையும் துரத்தியடித்து இருளைத் தனதாக்கிக் கொண்ட ஒரு நாளில் சுசாந்தனைப்போல் இன்னும் ஏழுபேரை அவர்கள் இருப்பிடத்தில் வைத்து குற்றவாளிகள்போல் பிடித்து விமானநிலையத்துக்கு அழைத்துச் சென்றார்கள். மறு பரிசீலனைக்கு கடிதங்கள் அனுப்பிவிட்டு நம்பிக்கையுடன் காத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தவர்களுக்கு காவலர்கள் அழைத்துச் சென்றதால் எந்தக் கேள்வியுமில்லாமல் விமானத்தில் ஏற்றப்பட்டார்கள். எறிந்த இடத்திற்கே திரும்ப வரும் பந்துகள் போல் தாயகத்தில் அடிக்கப்பட்டு சுவிசில் வந்து விழுந்த பந்துகள் எறிந்த இடத்திற்கே அதாவது தாயகத்திற்கே திரும்பவும் அடிபட்டுச் செல்கின்றன. தங்களைத் திருப்பி அனுப்பா விட்டால் அது செய்வோம் இது செய்வோம் என்று இவர்கள் செய்த எந்த வாக்குறுதிகளையும் செவி சாய்க்காத அவர்கள் கும்பிட்ட தெய்வங்ளெல்லாம் கண்மூடி நிற்க அவர்கள் பரிதாபமாகத் தாயகம் அனுப்பப் பட்டார்கள்.

ஆயிரம் கனவுகளுடன் ஆறுவருடங்களுக்கு முன் பயணப்பட்ட சுசாந்தன் எல்லைக்காவலில் இருந்த மண் மூட்டைகள் சரிந்ததுபோல் சகல நம்பிக்கையும் இழந்து விமான இருக்கையில் சரிந்து உட்கார்ந்திருந்தான். கடன் சுமையும் வாழ்வாதாரத்திற்கு என்ன செய்வதென்ற பெருஞ் சுமையும் நெஞ்சை அழுத்த அவன் நெஞ்சில் பிள்ளைகளின் முகங்கள் நிழலாட நிமிர்ந்து உட்கார்ந்தான். இந்த உலகத்திற்கு அவர்களைக் கொண்டுவருவதற்குக் காரணமாய் இருந்துவிட்டு எப்படி கோழையாய் மனமுடைந்தேனென்று நெஞ்சை நிமிர்த்தினான். அறத்தையும் வீரத்தையும் ஒருங்கே நெஞ்சில் சுமந்து நமக்காய் காற்றாய் செயல்பட்டு வீரத்தை எம்மில் விதைத்த தலைவர் சொற்களை எப்படி மறந்தேன்.

தோல்வி என்று ஒன்று மேயில்லை. தோல்வி என்பது ஒத்தி வைக்கப்பட்ட வெற்றி. காதோரம் தனக்கே சொந்தமான மென்மையான புன்முறுவலுடன் வழி காட்டித் தலைவன் சொல்வது போல் உணர சிலிர்த்தது மேனி. புத்து ணர்ச்சி தோன்ற நிமிர்ந்து உட்கார்ந்தான். தன்னால் எல்லாவற்றையும் சமாளித்து பிள்ளைகளை வாழ வைக்க முடியுமென்ற வைராக்கியம் பிறந்தது.

**(35 ஆம் பக்கத் தொடர்......)**

'ஏண்டா! உன் மனசுல என்ன நெனச்சுக்கிட்டு இருக்க? பகட்டான பேச்சுக்கு ஏமாந்து நாக்க தொங்கப் போட்டுக்கிட்டு வந்துருவேனு நெனச்சியா? காம வெறி புடிச்ச நாயே! உன்னமாதிரி விளக்க மாத்துக்கு பட்டுக்குஞ்சம் கேக்குதா?" என்று சீறிவிட்டு விளக்குமாறை எடுத்து அவனை நையப்புடைத்து விட்டு வீட்டை நோக்கி விரைந்தாள் தனம்.
கங்காணி தன் தவறை உணர்ந்தான். அவமானம் தாங்காமல் அந்த ஊரை விட்டே பெட்டிப்படுக்கையுடன் ஓடி விட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அலெக்ஸ் பரந்தாமன்

# படிப்பும் பாதிப்பும்

**கதை: வெட்டியான் ஆசிரியர் : க. பரணீதரன்**

**தொகுப்பு: அல்வாய்ச் சண்டியன்**



வாழ்க்கையில் ஒருவர் முன்னேறுவதைப் பார்த்து, கீழ்மட்டத்தில் வதியும் பலரும் 'நாங்களும் இப்படி வரவேண்டும், வாழவேண்டும்... ' என நினைப்பதுண்டு. இந்த முயற்சிக்கான படிநிலை ஒவ்வொருவருக்குள்ளேயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்டு நிற்கும். படிப்பால்... கடின உழைப்பால்... ஆதரவளிப்போரால்... மனசாட்சிக்கு விரோதமான குறுக்கு வழிகளால்... இப்படிப் பலவிதமான வகையில் முன்னேற்றம் காணுவார்கள். கண்டுமிருக்கிறார்கள்.

சிலரது வாழ்வியல் போராட்டங்களைக் கூர்ந்துநோக்கும்போது, அவர்கள் பிறருக்குத் தீங்கு நேராவண்ணம் தம் சுயமுயற்சியால், முன்னேறத் துடிப்பார்கள். நன்கு பிரயாசைப்படுவார்கள். ஆயினும், அவர்கள் காண்பதெல்லா மென்னவோ வெறும் பூச்சியம்தான். இதற்கான பிரதான காரணி என்ன? செய்யும் தொழிலுக்கேற்ற வருவாய் அற்ற நிலை. நிரந்தரத்தொழிலின்மை. தவறான பழக்கவழக்கங்கள். பின்நிலைப் படுத்தப் பட்ட சமூக வாழ்வியல். இவற்றைவிட, அவர்களைப் பீடித்து நிற்கும் வறுமை என்பன என்றே கூறலாம்.

இந்த வறுமையின் உச்சப்பயன்பாடானது, ஒருமனிதனின் குடும்ப முன்னேற்றத்துக்கான சிந்தனைகளையும் செயல்முறைகளையும் நீர்த்துப்போகச் செய்து விடுகிறது என்பதற்கு, ஓர் உதாரணமாக 'அல்வாய்ச்சண்டியன்' எனும் சிறுகதைத் தொகுப்பினுள் க. பரணீதன் எழுதியிருக்கும் 'வெட்டியான்' என்ற சிறுகதை அமைகிறது.

நிரந்தர வருவாய் அற்ற ஒருவனுக்கு, வறுமைநிலை சூழும்போது, அவன் தனது கொள்கைப்பிரமாணங்களைத் தளர விடுவதையும், தனது குடும்பத்தின் மகிழ்ச்சிக்காகவும் வயிற்றுப்பசிக்காகவும் பொருளாதாரத் தேவைகளுக்காகவும் எந்தளவுக்கு கீழே இறங்கி வரமுடியுமோ அந்தளவுக்கு கீழே இறங்கிவருமொரு துர்ப்பாக்கியநிலையை 'வெட்டியான்' சிறுகதையின் நாயகன் மூர்த்தி என்பவனூடாக பரணீதரன் வெளிப்படுத்தியிருக்கும் விதம் வெகு சிறப்பு.

மூர்த்தி... பின்நிலைப்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தின் பிரதிநிதி. வறுமையோடு போராடும் ஒரு குடும்பத்தலைவன். அன்பான அதேவேளை, சமூகமாறுதல்களை விரும்பும் ஒரு பெண்ணுக்குக் கணவன். இரு பெண்பிள்ளைகளின் தந்தை. வெகுளித்தனம் மிக்க ஓர் அப்பாவி.

மூர்த்தியின் தந்தை ஒரு சலவைத் தொழிலாளி. அவர் இறந்தபின், மூர்த்தியைச் 'சின்னக்கட்டாடி'யாகப் பார்க்க அவனது மனைவி விரும்பவில்லை. ஆனால், ஊரோ அவனைப் 'பெரியகட்டாடி'யாக்க முனைப்புக் கொள்கிறது. இந்நிலையில், அவன் தனது மனைவியின் ஆலோசனைப்படி, பட்டணத்தில் ஒரு சலவைத்தொழிலகம் ஒன்றை ஆரம்பிக்கிறான். தொழிலகம் ஆரம்பித்த நாளில் இருந்து, அதனூடாக வரும் வருமானம் அவனது குடும்பத்திற்குப் போதுமானதாக இருந்தாலும், போர்க்காலச் சூழல் அவனது தொழிலகத்தையும் விட்டுவைக்கவில்லை. சலவைத்தொழிலகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரைமட்டமாகிப்போகிறது. ஏற்கனவே கையிருப்பில் இருந்தகாசும் அவனது மனைவி அணிந்திருந்த நகைகளும் மேலும் இருபிள்ளைகளின் பிறப்புச் செலவுகளோடு தீர்ந்து போகின்றன.

மூர்த்திக்கு இப்போது நான்கு பிள்ளைகள். மீள சலவைத்தொழிலகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு, அவனுக்கு எந்தவொரு வழிகளும் சாத்தியப்பட வில்லை. வறுமை அவனைத் துரத்துகிறது. குடும்பத்தையும் சூழ்ந்து கொள்கிறது. ரியூசன்காசு கட்டாவிட்டால், பிள்ளையை அடிக்கக் காத்திருக்கும் கிளார்க் அண்ணன். "போட்டிருக்கும் வெள்ளைக் கவுண் வெளிறிப்போய்க் கிடக்கு..." என ஏசும் பாடசாலை அதிபர். 'உயலா'ப் போத்திலும், 'சேர்பெக்சு'ம் வாங்க வேணும்... என்று வேண்டுதல் விடுக்கும் இன்னொரு பிள்ளை.

மூர்த்தியால் எதுவும் செய்யமுடியாத நிலை. குடும்பத்தில் பொருளாதார நெருக்கடி. இந்த இக்கட்டானவேளை, அவனைத் தினக்கூலியாக மாற்றி விடுகிறது. விறகு கொத்துவது... வேலி அடைப்பது... கிடங்குகள் வெட்டுவது... போன்ற நிரந்தரமற்ற தொழில்களின்மூலம் கிடைக்கும்வருவாயில், அவனது குடும்பம் ஓரளவு பசியாறிக் கொண்டிருந்தது.

இந்நிலையில்தான், மூர்த்தியின் தந்தை இருந்த ஊரில், மூர்த்தியோடு ஒன்றாகப் படித்த சின்னக்கிளி என்பவன், சலவைத் தொழில் செய்து வருகிறான். அவன் 'கட்டாடி' வேலை மட்டுமன்றி, சாவீடு களில் சடலத்துக்குமேலே கூரையின்கீழ் வெள்ளைத்துணி கட்டுதல், தேங்காய் எண்ணெய்ப் பந்தங்களைத் தயார் செய்தல், கொள்ளிச்சட்டிக்கான தூக்கு மற்றும் வாய்க்கரிசி பொரித்தல்... போன்ற குடிமை வேலைகளைச் செய்வதோடு, சுடலையில் பிணம் எரிக்கிற வேலையை யும் செய்து கொண்டிருந்தான்.

தனக்கு உதவிக்கு ஆள் இல்லை என்கிற நிலை உருவாகியபோது, அவனது பார்வை மூர்த்திமீது திரும்புகிறது. மூர்த்தியின் அப்பாவித்தனம் சின்னக்கி ளிக்கு வாய்ப்பாகப்போக, மூர்த்தியின் மனைவி அதை விரும்பவில்லை. ஆயினும், அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. ஊருக்குள் தனது கண வனை 'சின்னக்கட்டாடி' என்று அழைப் பதை விரும்பாதவள் அவள்... சுயமாக சலவைத்தொழிலகம் அமைத்து அவ னுக்கு பிழைப்புக்கு வழிகாட்டியவள் அவள்... இறுதியில், கணவன் சுடலையில் பிணத்தை எரிக்கும் வேலையைப் பற்றியும், பிணம் தீயில் எரிந்து கருகும் போது எழும் வாடையை மறப்பதற்கு குடிக்கச்சொல்லி, அப்பழக்கத்தை சின்னக்கிளி ஏற்படுத்திவிட்டதையும் அவள் அறிந்துகொண்டபோது... அழத்தான் முடிந்தது அவளால்.

ஒருதடவை சுடலையில் பிண மொன்றை எரித்துவிட்டு, வீட்டிற்கு வருகிறான் மூர்த்தி. வந்தவன் தன்மனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியைக் கட்டிப்பிடித்து

ஓ... வெனக் கதறி அழுகிறான். அவன் அழுவதற்கான காரணத்தை அவள் கேட்டபோது, அவன் கூறும் விளக்கம்...

இந்நாட்டில் நிலவிய போர்ச்சூழலும், ஆங்காங்கே ஏற்படும் அகால மரணங்களும், அம்மரணங்களுக்குள் சிக்கிய மனிதர்களின் ஒரு புள்ளி நிகழ்வையும் மூர்த்தியூடாக கதாசிரியர் பேச வைக்கும் போது... அக்கணத்தை எந்தவொரு வாசகனாலும் கண்களில் கண்ணீர் இன்றி கடந்துவிட முடியாது. இந்நிகழ்வின்பின், இனிச் சுடலையில் பிணங்களை எரிப்பதில்லை... என உறுதி கொள்கிறான் மூர்த்தி. ஆனால், அவன் கொண்ட மன உறுதியை ஒரு சொற்ப நிமிடத்துக்குள் உதாசீனப்படுத்திவிடுகிறது அவனது குடும்ப வறுமை.

அன்று அடுப்பினில் உலை கொதிக்கவில்லை... பிள்ளைகள் தங்களது பாடசாலைத் தேவைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.... நாதனின் கடையில் ஏற்கனவே அரிசி கடனுக்கு வாங்கியிருந்ததால், திரும்பவும் கடன் கொடுக்க முடியாதென ஏசிக்கலைத்துவிடும் நாதனின் மனைவி...

சமைப்பதற்கு அரிசி இல்லாத நிலையில், அவர்கள் ஒருவரும் அன்று மத்தியானம் எதுவும் சாப்பிடவில்லை. இது குறித்து மூர்த்தி தன்மனைவியிடம் வினாவுகிறான். அவள் தனது சேலைத்தலைப்பினால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நகருவதை அவதானித்து விடுகிறான் மூர்த்தி. "ஒரு றாத்தல் பாணிருக்கு. வாங்கோ சாப்பிடலாம்..." என்று மனைவி எல்லாரையும் அழைப்பது மூர்த்திக்குக் கேட்கிறது. ஒரு றாத்தல் பாண்! ஆறு ஜீவனுகள். எப்படிப் பங்கிடுவது...?

மூர்த்திக்கு எதுவும் செய்யமுடியாத நிலை. சுடலையில் நடந்த நிகழ்வின் நிமித்தம் அவன், தான் இனிச் சுடலையில் பிணங்கள் எரிக்கப் போவதில்லை ... என்ற முடிவோடு இருந்தவனுக்கு, குடும்பத்தின் வறுமை நிலை மேலும் குழப்பத்திற்குள்ளாக்கிக் கொண்டிருந்தது. அப்போது சின்னக்கிளியின் மகனானவன் மூர்த்தியைக் கூப்பிட்டபடி... உள்ளே வந்து கொண்டிருந்தான்.

" மூர்த்தியண்ணை! கனகரத்தினம் ஐயான்ர தாய் சின்னாச்சிக்கிழவி செத்துப்போச்சுதாம். கிழவி படுக்கையில கனகாலம் கிடந்ததால படுக்கைப் புண்ணாம். கனநேரம் வைச்சிருக் ஏலாதாம். நேரத்தோட எடுக்க வேணுமாம். அதுதான் கனகரத்தினம் ஐயா உன்னட்டை குடுக்கச்சொல்லி ஆயிரம் ரூவாவத் தந்து விட்டவர். நேரத்தோட விறகை வெட்டி அடுக்கட்டாம். கொஞ்சம் ஒழுங்கா நிண்டு அரையும் குறையுமில்லாமல் எரிச்சுப்போட்டா, பார்த்துப் பாராமல் இன்னும் காசு தருவார்..."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக்கிளியின் மகன் கூறியதைக் கேட்டு, மூர்த்தியின் மனைவி திகைத்துப் போகிறாள். ஊருக்குள் தனது கணவன் குடிமைத்தனமான வேலைகளைச் செய்ய விரும்பாதவளுக்கு, மீண்டும் அவனை அதே நிலைக்கு ஆளாக்க அவள் மறுக்க முனைகையில், மூர்த்தி அவளைத் தடுத்து விடுகிறான்.

வீட்டினில் அடுப்பெரியாத நிலை... பிள்ளைகளுக்கான பாடசாலைத் தேவைகள்... நாதன் கடைக்குக் கொடுக்க வேண்டிய அரிசிக் காசு... மூர்த்திக்கு பழையனவெல்லாம் மறந்து போகின்றன. அவனுக்கு இப்போது தேவைப்படுவது குடும்பத்துக்கான அடிப்படைத் தேவைகளே. மூர்த்தி வண்ணக்கிளியின் மகனிடம் அந்த ஆயிரம் ரூபாவை வாங்கிக்கொண்டு, நாளை சுடலையில் சிதையில் அடுக்குவதற்குத் தேவையான பூவரசு மரங்களைத் தறிப்பதற்காக கோடரி இருக்கும் இடத்தை நோக்கிப் போகின்றான். இத்தோடு கதை நிறைவு பெறுகிறது.

மனிதசமுதாயத்தில் மாற்றம் ஏற்படவேண்டும்என நினைப்பவர்களுக்கு, இக்கதையானது மனதளவில் சற்றேனும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. மூர்த்தியின் மனைவி பொன்னி நல்லதொரு கதாபாத்திரம். பொன்னி மூலம் இன்னும் சில கருத்துக்களை விழிப்புணர்வூட்டக்கூடியவகையில் சொல்லி, கதையை நகர்த்தியிருக்கலாம். மக்கள் மத்தியில் ஒரு சமூகம் பின்னிலையில் நிற்பதற்குக்காரணம்வறுமை மட்டுமல்ல, சின்னக்கிளி போன்றோரின் விழிப்படையா மனோபாவமே.

சில இடங்களில் உரைநடை வேகமெடுப்பதனையும், கதைக்கான தலையங்கத்திலும் ஆசிரியர் சற்று கவனம் செலுத்தியிருக்கலாம். "ஓர் எழுத்தாளன் மக்களிடமிருந்து எதைப்பெற்றுக் கொள்கிறானோ, அதை எழுத்துக்களாக்கி... திரும்ப அதையே அவனிடத்தில் ஒப்படைப்பதுதான் மக்கள் இலக்கியமாகின்றது". அந்தவகையில், சமூகத்தில் பின்நிலைப்படுத்தப்பட்ட ஒரு விளிம்பு நிலை வாழ் மனிதனொருவனின் அவலவாழ்வினை அவனிடமிருந்து பெற்று, எழுத்துக்களாக்கி... திரும்ப அவனிடமே கொண்டுபோய் சேர்த்திருப்பதில் பரணீதரன் வெற்றி கண்டுள்ளார் என்றே கூறலாம்.

நடக்கும் அகராதி என அழைக்கப்பட்ட
மதிப்புக்குரிய மாக்ஸ் முடங்கிப்போனது
ஜென்னியின் மரணத்தில்தான்.
1881 டிசம்பர் 2 இல் தன்
மனைவி இறந்தபோது மார்க்சும்
செத்துப்போய்விட்டார்.

- எங்கல்ஸ் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கதை

# கரும்பலகை



-மு.தயாளன் -




அதிபரின் அறைக்குள் நுழைந்த கபிலனின் அப்பாவின் நண்பர் அதிபருக்கு வணக்கம் சொல்லிவிட்டு அவரின் முன்னால் அமர்ந்தார்.

" என்ன திடீரென்று வந்திருக்கிறியள்?" என்று அதிபர் கேட்டார்.

" ஒரு அலுவலாய் வந்தனான். நான் எதையும் நேரே கேட்கிறனான். கபிலன் என்ரை நண்பரின்ரை மகனென்று உங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்குத் தெரியும். அவரைப்பற்றிக் கேட்பமென்றுதான் வந்தனான்" என்றார். அதிபர் அவரைப் பார்த்து "கபிலன், நல்ல ஒரு ஆசிரியர். பொறுப்பான பிள்ளை. எங்களுக்குப் பல புது விசயங்களையெல்லாம் அறிமுகப்படுத்தியிருக்கிறார்." என்று கூற "அவருடைய அப்பா வந்திருக் கிறார். கபிலனுக்கு ஒரு கல்யாணம் பேசலாம் எண்டு நினைக்கிறார். அது சம்பந்தமாக உங்களிட்டை ஒரு விசயம் தெளிவாக்கத்தான் இப்ப வந்தனான்." என்று அவர் முடிக்க அதிபர் அவரை ஒரு கேள்விக் குறியோடு பார்த்தார்.

" அது ஒண்டுமில்லை...இஞ்சை அவரோடை படிப்பிக்கிற வசந்தி எண்ட ஒரு பிள்ளையோடை அவர் வீதியிலை நிண்டு கதைத்ததைப் பார்த்திட்டார். அதனாலை கொஞ்சம் குழப்பமாயிருக்கிறார். நான் உங்க ளிட்டை விசாரிச்சுப் பார்க்கிறன் எண்டிட்டு வந்தனான்" என்று முடித் தார்.

அதிபர் சிரித்துவிட்டு " அப்படியெல் லாம் ஒண்டுமில்லை. அவை இரண்டு பேரும் யூனியிலை ஒண்டாய்ப் படிச்சவை. இந்தக் கதை இஞ்சையும் வந்தது. நான் நேரே கபிலனிட்டைக் கேட்டனான். அவர் அடியோடை மறுத்திட்டார். தாங்கள் இருவரும் நண்பர்கள் மட்டும்தான் என்று உறுதியாகச் சொல்லியிட்டார்." என்று அதிபர் கூற

" அப்பிடியெண்டால் சரி நான் போட்டு வாறன்" என்று கூறிவிட்டு கபிலனின் அப்பாவின் நண்பர் புறப்பட்டுவிட்டார்.

இதுவரையும் வகுப்பறைக்குச் சென்ற கபிலனின் மனதில் அப்பாவின் நண்பர் ஏன் வந்தார் என்கின்ற கேள்வி விடைகிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்தது.

ஏற்கனவே அந்த மாணவி ஏன் குடை தந்தாள் என்கின்ற விடயம் உள்ளது. தன்னைச் சுற்றி ஏதோ நடக்கிறது என்பதுமட்டும் அவனுக்குத் தெளி வாகத் தெரிந்தது.

மதிய இடைவேளை வந்தது. வழக்கம் போல் கபிலன் வெளியில் வந்து வீதியின் மறுகரையில் உள்ள விஜ யலட்சுமி புத்தக சாலைக்குச் சென் றான். அங்கே அப்போதுதான் வந்த அக்கடையின் முதலாளி கணேசலிங் கம் சிரித்தபடி இருந்தார். கபிலனைக் கண்டதும் வாங்கோ மாஸ்டர் என்று கூறிவிட்டு சிறிது நேரம் இருவரும் உலக நடப்புகள் பற்றிக் கதைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு கணேசலிங்கம் கபிலனைப் பார்த்து "மாஸ்டர் பௌதிகத்திற்கு ஒரு புத்தகம் எழுதித்தரலாமே" என்று கேட்டார். முதன்முதலாக இப்படிக் கேட்டவுடன் மகிழ்ச்சியடைந்த கபிலன் எதைப்பற்றியும் யோசிக்காமல் " அதுக்கென்ன தந்தால் போச்சு" என்று கூறிவிட்டு நேரத்தைப் பார்த்தான். மதிய இடைவேளை முடிவடையும் நேரம் வந்துவிட்டது. " இதைப்பற்றி நாளைக்கு வந்து கதைக்கிறன்." என்று கூறிவிட்டு அவசரஅவசரமாக வீதியைக்கடந்து பாடசாலையை நோக்கி நடந்தான். மதியத்திற்குப் பின் முதல் பாடம் உயர்தர வகுப்பிற்கான பிரயோக கணிதம்.

அவன் உள்ளே நுழையும்போது மணியடித்துக் கொண்டிருந்தது. நேரே தன்னுடைய வகுப்பிற்குச் சென்றான். அந்த வகுப்பு அதிபரின் அறைக்குப் பக்கத்திலிருந்தது.

எட்டுப் பிள்ளைகள்தான் அந்த வகுப்பிலிருந்தார்கள். அந்த வகுப்பில் தான் அந்தப் பெண்ணும் இருந்தாள். கபிலன் தன்னுடைய முகத்தை வலுக் கட்டாயமாக கடுமையாக வைத்திருந்தான். அவர்களை நிமிர்ந்து பார்க்காமலேயே பாடத்தைத் தொடங்கினான். வழமையாக பகிடி விட்டுப் படிப்பிக்கும் கபிலன் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு படிப்பித்தது அவர்களுக்குப் புதிதாகவிருந்தது.

கபிலனது மனம் ' கபிலா கவனமாக இரு. உனக்கொரு சோதனை இது.' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தது.

வகுப்பு முடிந்ததும் அவர்கள் ஏதோ சொல்ல எத்தனிப்பது அவனுக்குப் புரிந்தது. அதைக் கேளாதவன்போல் வேகமாக வெளியே சென்றுவிட்டான். நிச்சயமாக அவர்களுக்கு அது ஏமாற்றமாகவே இருந்திருக்கும்.

வெளியில் வந்த கபிலன் தனது நேரசூசியைப் பார்த்தான். கடைசிப் பாடம் அவனுக்கு இல்லை. அதிபரிடம் சென்று தனக்குத் தலையிடியாக இருப்பதாகக் கூறிவிட்டு பாடசாலையைவிட்டுப்புறப்பட்டுவிட்டான். வெளியில் வந்த கபிலன் நேராக அவனது அப்பா தங்கியிருக்கும் நண்பரின் வீட்டுக்குச் சென்றான். அங்கு கதைத்துக் கொண்டிருந்த அவர்கள் இருவரோடும் அவனும் ஒருவனாக இருந்து கதைத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனீர் கொண்டு வந்து வைத்த அன்ரி "கபிலன் எப்பிடி இருக்கிறீர்?" என்று கேட்டார்.

" இருக்கிறன் அன்ரி. பள்ளிக்கூடம் சரியான வேலை. அதுதான் இந்தப் பக்கம்வாறதில்லை." என்று ஒப்புக்குக் கூறிவைத்தான்.

அத்தோடு அவ உள்ளே போய் விட்டா. கபிலன் தேனீரைக் குடித்த படி மற்றவர்களோடு கதைக்கத் தொடங்கினான்.

கபிலனின் அப்பாதான் தொடங் கினார் . " தம்பி உனக்கு வயது வந்திட்டுது. உனக்கொரு கல்யா ணத்தைக் கட்டிப்பார்க்க அம்மா ஆசைப்படிறா" என்றார். கபிலன் கீழே பார்த்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து " அப்பா உங்களுக்கு நான் பல தடவை சொல்லியிட்டன். எனக்கு இப்ப கலியாணம் வேண் டாம். நான் மேலை படிக்கவேணும்." என்றான்.

இடையில் புகுந்த அப்பாவின் நண்பர் "அதுசரி தம்பி.. நீங்கள் சொல்லிறது. படிக்கத்தான் வேணும். அதை கல் யாணம்கட்டிப்போட்டுச்செய்யலாம் தானே. அம்மா அப்பாவும் திருப்திப் பட்ட மாதிரி இருக்கும்" என்று அவர் முடிக்கமுன்னம் " அங்கிள் அது சரிவராது. படிச்சபிறகு வாழ்க் கைக்கை போனால்தான் வாழ்க்கை சிறக்கும்." என்றான்.

" சரி நீ படிச்சு முடிச்சாப்போலை அங்கிள் தன்ரை மகளுக்கு உன்னைக் கேட்கிறார். எங்களுக்குச் சம்மதம். உனக்குச் சம்மதமோ?" என்று தகப் பன் ஒரு வெடி குண்டைத்தூக்கி முன்னால் போட்டார். கபிலன் திடுக்கிட்டுவிட்டான்.

" அப்பா உங்களுக்குத் தெரியாததா. அங்கிளின்ரை மகள் என்னுடைய மாணவி. ஒரு மாணவியை நான் எப்பிடிக் கட்டேலும்?..உந்தக் கதையை இனிக் கதைக்காதை யுங்கோ" என்று கூறிவிட்டு சட் டென்று எழுந்து

"அப்ப நான் போட்டுவாறன். அங்கிள் குறை நினையாதையுங்கோ" என்று புறப்பட்டான்.

இருவரும் திடுக்கிட்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

( இன்னும் வரும்....)

காதல் என்பது உடல் சார்ந்த ஒன்றே.
அதை மனம் சார்ந்த ஒன்றாகக்
கருதுவது முட்டாள் தனமானது
ஆகும். ஏனென்றால் மனம், ஆத்மா
என்பதெல்லாம் வெறும் கற்பனையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LUXMI EDUCATION CENTRE

# LEC

## ENROLLING NOW
**2022 / 2023**



**REGISTER NOW**

www.leconline.co.uk

0208 573 0368

07852 810 285

## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science

**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பிரசுராலயம்

Luxmi Publication



மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4



மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
300Rs/£4





மு.தயாளன்
300Rs/£4




மு.தயாளன்
400Rs/£4




மு.தயாளன்
400Rs/£4



சு. ஆர்த்திகா
500Rs/£4



அலெக்ஸ் பரந்தாமன்
400Rs/£4

India 400 Rs
London £4
Can/Ame $10
Europe 10 Euro

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No. 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை luxmi2128@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்.

எனது எல்லாப்புத்தகங்களும் சிறுகதை மஞ்சரிகளும்
**Amazon Kindle** இல் உள்ளன.
**www.amazon.co.uk/ebooks** இல்
**Type M.Thayalan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org